# வானவில்

# VAANAVIL

| இதழ் 168 | மார்கழி 2024 |
|---|---|
| ISSUE 168 | December 2024 |


# புதிய அரசாங்கம் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துமா?




நொவம்பர் 14ஆம் திகதி இலங்கையில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி 159 உறுப்பினர்களைப் பெற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்குக் கூடுதலான பலத்துடன் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்துள்ளது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் தனியொரு கட்சி மூன்றில் இரண்டுக்கும் அதிகமான உறுப்பினர்களுடன் வெற்றியீட்டியிருப்பது இதுதான் முதல் தடவை எனலாம்.

இத்தகைய ஒரு வெற்றி தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த ஒரு அசுர பலமும் வரலாற்றுச் சந்தர்ப்பமுமாகும். ஏனெனில், இலங்கையில் எத்தகைய மாற்றங்களை ஓர் அரசாங்கம் செய்வதானாலும், முதலாவதாக அந்த அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவையாகும். அத்தகைய ஒரு ஏற்பாடுதான் தற்போதைய அரசியலமைப்பில் செய்யப்பட்டிருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதி தேர்தலின் போதும், நாடாளுமன்றத் தேர்தலின் போதும், முன்னைய அரசாங்கங்களின் தவறான பொருளாதாரக் கொள்கைகள், இலஞ்சம் மற்றும் ஊழல் செயல்பாடுகள் என்பனவற்றைச் சொல்லி, தாம் ஆட்சிக்கு வந்தால் அவற்றைச் சீர்செய்வோம் என்று சொல்லியே பிரச்சாரம் செய்தது.

ஆனால், இலங்கையில் நிலவிய அத்தனை சீர்கேடுகளுக்கும் தற்பொழுது நடைமுறையில் உள்ள நிறைவேற்று அதிகாரமுள்ள அரசியல் அமைப்பே காரணம் என, கடந்த காலத்தில் பல்வேறு தரப்பினராலும் சுட்டிக் காட்டப்பட்டு வந்துள்ளது.

தற்போது இருக்கின்ற அரசியலமைப்பு சுமார் 46 ஆண்டுகளுக்கு முன்னர் 1978 இல் அப்போது ஆட்சியில் இருந்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசால் கொண்டு வரப்பட்டதாகும்.

1977 பொதுத்தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் வெற்றி பெற்ற ஜே.ஆர். தலைமையிலான ஐ.தே.க. அரசு அந்தப் பலத்தைப் பயன்படுத்தி, 1972 இல் சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசால் கொண்டு வரப்பட்டு நடைமுறையில் இருந்த குடியரசு அரசியல் யாப்பை அகற்றிவிட்டு, இந்த நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரமுள்ள அரசியல் யாப்பைக் கொண்டு வந்தது.

இந்த யாப்பைக் கொண்டு வந்த நேரத்தில் இதன் வலிமை பற்றிக் குறிப்பிட்ட அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, "ஆணைப் பெண்ணாகவோ அல்லது பெண்ணை ஆணாகவோ மாற்றுவதைத் தவிர, மற்ற எல்லாவிதமான அதிகாரங்களும் இந்த அரசியலமைப்புக்கு உண்டு" எனப் பெருமையுடன் சொன்னார்.

இந்த அரசியல் அமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி பதவியில் இருப்பவர் நாடாளுமனறத்துக்கோ, நீதிமன்றத்துக்கோ கட்டுப்படத் தேவையில்லை என்பதாலும், வேறு பல விடயங்களை தாம் நினைத்தவாறு செயப்படுத்த முடியும் என்பதாலும், அந்த நேரத்தில் இலங்கையில் இருந்த அனைத்து அரசியல் கட்சிகளாலும், பொது அமைப்புகளாலும் அது எதிர்க்கப்பட்டது.

இந்த அரசியல் அமைப்பை எதிர்த்ததிற்கு ஏனைய காரணங்களாக அது அறிமுகப்படுத்திய விகிதாசாரத் தேர்தல் முறையும், விருப்பு வாக்கு முறையும் இருந்தன.

ஆனால், பிற்காலத்தில் விகிதாசாரத்


தொடர்ச்சி 4ம் பக்கம் பார்க்க...


**நூறு சிந்தனை மலரட்டும்**

# தேர்தல் வாக்குறுதிகளைக் கைவிட்டதுதான் இதுவரையில் நிகழ்ந்த ‘மாற்றம்’

**இ**லங்கையின் ஆட்சியதிகாரம் முழுமையாக தேசிய மக்கள் சக்தியின் வசம் வந்தடைந்துள்ளது. இனி அடுத்த 5 வருடங்களுக்கு (2029 வரை) தற்போதைய ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கா, 21 பேர் கொண்ட புதிய மந்திரி சபை மற்றும் பாராளுமன்றம் இணைந்து இலங்கையை ஆட்சி புரியலாம். பாராளுமன்றத்தில் தே.ம.சக்தி மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருப்பதால், தற்போதைய ஆட்சியாளரிடம் இலங்கை தழுவி மக்கள் மத்தியில் மிகப்பெரிய எதிர்பார்ப்பு நிலவுகின்றது. குறைந்தபட்சம் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ‘வளமான நாடு அழகான வாழ்க்கை’ என்ற தலைப்பில் தே.ம.சக்தி வெளியிட்ட அறிக்கையில் சொல்லப்பட்ட விடயங்களையாவது அவர்கள் முழுமையாக நிறைவேற்றுவார்களென மக்கள் நம்புகிறார்கள்.

நவம்பர் 21ம் திகதி புதிய பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி உரையாற்றியிருந்தார். அந்த உரையில் குறிப்பாக நாட்டின் பொருளாதாரம், இனவாதம், மதவாதம், சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை போன்ற விடயங்களைப்பற்றி பேசியிருந்தார்.

ஆனால், இலங்கையில் ஏழு தசாப்பதங்களுக்கு மேலாக தீர்க்கப்படாமல் இருக்கும் இனப்பிரச்சனையை எப்படித் தீர்ப்பது என்பது தொடர்பாக ஜனாதிபதி தனது உரையில் எதுவுமே குறிப்பிடவில்லை. ‘இனி இந்த நாட்டில் இனவாத அரசியலுக்கு இடமில்லை. எந்த விதத்திலும் மதவாதச் செயற்பாடுகள் எழுச்சி பெறுவதற்கும் இடமளியோம். நாம் போதுமென்ற அளவில் இனவாதத்தினால் பாதிப்பை கண்டிருக்கிறோம். ஆறுகள் நிறைய கண்ணீரை கண்டிருக்கிறோம். இன்று நாட்டில் ஒவ்வொருவர் இடையிலும் குரோதமும் சந்தேகமும் அதிகளவில் வலுப்பெற்றுள்ளது. ஆனால் இனி எவரும் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக இனவாத, மதவாத போராட்டங்களை முன்னெடுக்க இடமளியோம்’ என தனது உரையில் அழுத்தம் திருத்தமாகக் கூறிய ஜனாதிபதி, கட்டாயமாக இன–மதவாத செயற்பாடுகளை நிறுத்துவதற்கான – தேர்தல் அறிக்கையில் கூறியவாறு– தே.ம.சக்தியின் கொள்கையையும் முன்வைத்திருக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் அறிக்கையில், ‘2015–2019 புதிய அரசியலமைப்பொன்றினை தயாரிப்பதற்காக கடைப்பிடித்த செயற்பாட்டினை துரிதமாக நிறைவு செய்து சமத்துவம் மற்றும் சனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரே நாட்டிற்குள் அனைத்து மக்களும் ஆட்சியில் தொடர்பு கொள்ளக்கூடியவாறு ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்திற்கும் மாவட்டத்திற்கும் மற்றும் மாகாணத்திற்கும் அரசியல் ரீதியானதும் அதிகாரத்தை பகிர்ந்தளிக்கின்ற அரசாளுகைக்கான அனைத்து இனத்தவர்களினதும் அரசியல் பங்காண்மையை உறுதி செய்கின்ற புதிய அரசியலைப்பு ஒன்றினைத் தயாரித்தல்’ என தெளிவாக எழுதியிருக்கிறார்கள். இவ்வாறு எழுதிவிட்டு, ஜனாதிபதி தனது பாராளுமன்ற உரையில் இனப்பிரச்சனைக்கான தீர்வு தொடர்பாக எதுவும் பேசாமல் கடந்து போவதென்பது, தே.ம.சக்தி தமது இனப்பிரச்சனையை தீர்ப்பார்களா என்ற சந்தேகத்தை எழுப்பிச் செல்கின்றது.

கோத்தபாய அரசு கவிழ்க்கப்பட்டவுடன், இலங்கை அரசைப் பொறுப்பேற்ற ரணில் தலைமையிலான அரசு 2023 இல் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை எதிர்த்து நாடு முழுவதும் முழங்கியவர்கள் தே.ம.சக்தியினர். அவ்வாறு முழங்கியவர்களில், ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கா மற்றும் தே.ம.சக்திக் கூட்டின் பிரதான அமைப்பான ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி) பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களின் உரையில்,

“இலங்கை தனது நிதி இறையாண்மையை சர்வதேச நாணய நிதியத்திடம் இழந்துள்ளது. இது வரிவிதிப்பு மற்றும் நிதிக் கொள்கைகள் மீதான பாராளுமன்றத்தின் அதிகாரத்தை மீறுவதாக இருக்கின்றது. இலங்கை இப்போது பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த நிலைமைக்கு திரும்பியுள்ளது” என்று ஜனாதிபதி தெரிவித்ததும்,

“உலகில் சர்வதேச நாணய நிதியத்திற்கு பின்னால் சென்ற எந்த நாடும் அதனால் உருப்பட்டதில்லை. இந்தக்கடன் வேலை செய்யப் போவதில்லை. சர்வதேச நாணய நிதியம் மக்களுக்கு சேவை செய்வதில்லை, திருட்டு அரசாங்கங்களை காப்பாற்றவே அது உள்ளது” என ரில்வின் சில்வா கூறியதும் முக்கியமானவை.

இவ்வாறெல்லாம் முன்னர் சொல்லிவிட்டு, ‘சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டினை எட்டியுள்ள ஒரு நாட்டிற்கு அந்த ஒப்பந்தத்தை விடுத்துச் செல்ல முடியாது என்பதை நாம் புரிந்து கொண்டுள்ளோம்’ என தனது பாராளுமன்ற உரையில் ஜனாதிபதி கூறியுள்ளார். இதனை நம்ப முடியாது. இந்தப் புரிதல் நிட்சயமாக அவருக்கும் தே.ம.சக்திக்கும் முன்னரும் இருந்திருக்க வேண்டும். மக்களை திசைதிருப்பி அரசியல் செய்வதற்காகவே, முன்னர் அந்த ஒப்பந்தத்தை எதிர்த்தார்கள் என்பதே உண்மை.

தமிழ் தேசியவாத தரப்பினரின் நீண்ட காலக் கோரிக்கையான, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குதல் தொடர்பாகவும் ஜனாதிபதி தனது பாராளுமன்ற உரையில் எதனையும் தெரிவிக்கவில்லை. இதற்கு, தே.ம.சக்தியின் தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சருமான விஜித ஹேரத், 29.10.2024 அன்று மந்திரிசபை கூட்டமொன்றின் பின்னர் ‘இந்த நேரத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கவோ அல்லது திருத்தவோ முடியாது’ என பகிரங்கமாக கூறியிருந்தமை காரணமாக இருக்கலாம். இந்த அறிவிப்புக் கூட, ‘பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உள்ளிட்ட அடக்குமுறை சார்ந்த அனைத்துச் சட்டங்களையும் இல்லாதொழித்து அனைத்து மக்களினதும் சுதந்திரத்தை உறுதி செய்தல்’ என தே.ம.சக்தியின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டதற்கு முரணானது. இதனால் தே.ம.சக்தியின் தேர்தல் அறிக்கையில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ள ஏனைய பல வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படுமா என்ற கேள்வியை எழுப்ப வேண்டியுள்ளது.


இலங்கையில் கடந்தகாலங்களில் அதிகாரத்திற்கு வருவதற்காக தேர்தலுக்கு முன்னர் பலவற்றை மேடைகளில் சொல்வது, பின்னர் அவற்றைக்கடந்து போவதுபோன்று தங்கள் கட்சி இருக்காதென தே.ம.சக்தி திரும்பத்திரும்ப சொல்லியிருந்தார்கள். ஏதோ ‘மாற்றம்’ வருமென நம்பிய மக்களும் தேசிய மக்கள் சக்தியிலிருந்து ஜனாதிபதியையும் 141 பாராளுமன்ற உறுப்பினர்களையும் (இதைவிட தேசியப்பட்டியலினூடாக 18 உறுப்பினர்கள்) தேர்தல்களில் தெரிவு செய்திருக்கிறார்கள். ஆனால் ஆட்சிக்கு வந்து 2 மாதங்களிலேயே இலங்கை இனப்பிரச்சனைக்கான தீர்வு தொடர்பாக மௌனம் சாதிப்பதோடு, சர்வதேச நாணய நிதி மற்றும் பயங்கவாதத்தடைச் சட்டம் தொடர்பாக அவர்கள் சொல்லி வந்ததைக் கைவிட்டுக் குத்துக்கரணம் அடித்துள்ளார்கள். இது தே.ம.சக்தியினர் கூறிய ‘மாற்ற’த்தை நம்பி வாக்களித்த மக்களை ஏமாற்றும் செயல்கள் என்பதில் எவருக்கும் மாற்றுக்கருத்து இருக்ககாது.

***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** sunvaanavil@gmail.com
*‘வானவில்’ இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

வானவில்

***இணையத்தளம்:*** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து ‘வானவில்’ இதழ்களையும் வாசிக்கலாம்.*

# தமது தலையில் தாமே மண் அள்ளிப் போட்ட சிறுபான்மை இனங்கள்!



இலங்கையில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மைகசும் மேலாக 159 உறுப்பினர்கள் பெற்று அமோக வெற்றியீட்டியுள்ளது. இது இலங்கையின் நாடாளுமன்ற அரசியல் வரலாற்றில் ஒரு பெரும் சாதனை என்பதில் ஐயமில்லை.

ஏனெனில், 2020 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெறுமனே 3 உறுப்பினர்களை மட்டும் பெற்ற ஒரு கட்சி, நான்கு வருடங்களே ஆன நிலையில் ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றி பெற்று, பின்னர் நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றி ஈட்டியிருப்பது ஒரு சாதாரண விடயமல்ல.

தேசிய மக்கள் சக்தி இத்தகைய ஒரு மாபெரும் வெற்றியைப் பெற்றிருப்பதற்குக் காரணம், இலங்கையை சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து கடந்த 76 ஆண்டுகளாக ஆட்சி புரிந்து வந்த இரண்டு பிரதான கட்சிகள் மீதும் மக்கள் முற்றாக நம்பிக்கை இழந்ததுதான்.

வழக்கமாக இத்தகைய நம்பிக்கை இழப்புகள் காரணமாக ஆட்சி மாற்றங்களைச் செய்பவர்கள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிங்கள மக்கள்தான். ஆனால் இந்த முறை இந்த மாற்றத்தில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்கள், மலையகத் தமிழ் மக்கள், முஸ்லீம் மக்கள் என, இலங்கையில் வாழ்கின்ற சிறுபான்மையின மக்களும் கணிசமான பங்கை வகித்திருக்கிறார்கள்.

இவ்வளவுக்கும் தேசிய மக்கள் சக்தி சிறுபான்மை இனங்கள் மீதான தனது கடந்தகால கொள்கையில் எவ்விதமான மாற்றங்களையும் செய்திருக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலின் போதும், நாடாளுமன்றத் தேர்தலின் போதும், அவர்கள் மேற்கொண்ட பிரச்சாரங்களில் முன்னைய அரசுகளின் கையாலாகாத்தனம் பற்றியும், அந்த அரசுகள் செய்த ஊழல்கள் மோசடிகள் குறித்துமே பிரச்சாரங்கள் மேற்கொண்டார்கள். அப்படியிருக்க, சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த மக்களும் இம்முறை தேசிய மக்கள் சக்திக்கே அதிகளவில் வாக்களித்திருக்கிறார்கள்.

ஒட்டுமொத்தமாக இலங்கை மக்கள் அனைவருமே தேசிய மக்கள் சக்தி செய்த பொய்ப்பிரச்சாரங்களில் ஏமாந்தே வாக்களித்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. அந்தத் தவறை அவர்கள் உணர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் வந்தே தீரும்.

பெரும்பான்மை சிங்கள மக்கள் எப்போதும் பொருளாதாரப் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்தே தேர்தல்களில் தமது முடிவுகளை எடுப்பது வழமை. ஆனால் சிறுபான்மை இனங்களைப் பொறுத்தவரையில், தமது இன ரீதியிலான பிரச்சினைகளை முன்வைத்தே தேர்தல்களில் தமது முடிவுகளை எடுப்பதுதான் வழமை.

**சங்கரன்**

அப்படிப் பார்க்கையில், இலங்கையில் இதுவரை காலமும் ஆட்சியில் இருந்த இரண்டு பிரதான கட்சிகளையும் விட, தேசிய மக்கள் சக்தியின் தலைமைக் கட்சியான ஜே.வி.பிதான் சிறுபான்மை இனங்களுக்கு விரோதமான மிக மோசமான சிங்கள பேரினவாதக் கட்சியாக இருந்து வந்திருக்கிறது. உதாரணமாக –

ஜே.வி.பி. ஆரம்பம் முதலே மலையகத் தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு கட்சியாக இருந்து வந்திருக்கிறது. மலையகத் தமிழ் மக்கள் "இந்திய விஸ்தரிப்புவாதத்தின் கைக்கூலிகள்" என ஜே.வி.பி. ஆரம்பம் முதல் பிரச்சாரம் செய்து வந்திருக்கிறது.

அது மட்டுமின்றி, சிறீமாவோ – சாஸ்திரி உடன்படிக்கையின் கீழ் தீர்வு காணப்படாது எஞ்சியிருந்த மலையகத் தமிழ் மக்களுக்கு இலங்கைப் பிராஜாவுரிமை வழங்க எடுத்த முயற்சியையும் ஜே.வி.பி. வன்மையாக எதிர்த்தது.

இலங்கைத் தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்திலும் ஜே.வி.பி. சிங்கள பேரினவாத நிலைப்பாட்டையே எடுத்தது. வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு ஓரளவுக்காவது அதிகாரப் பகிர்வு வழங்குவதற்காக மாகாண சபைகள் அமைப்பதற்கென 1987 இல் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக அரசியலமைப்பில் 13ஆவது திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பொழுது ஜே.வி.பி. அதற்கெதிராக ஆயுத வன்முறையில் இறங்கியது.

பின்னர் சந்திரிகாவின் அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக 2000 ஆம் ஆண்டில் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்த போது, ஜே.வி.பி. ஏனைய சிங்களப் பேரினவாதக் கட்சிகளுடன் இணைந்து அதைத் தீவிரமாக எதிர்த்து நிறைவேற்ற விடாமல் தடுத்தது.

அது மாத்திரமின்றி, இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்த வடக்கு கிழக்கு இணைப்பை மக்கள் கருத்தறியாது நீதிமன்றத்தை நாடி பிரிக்க வைத்தது.

முன்பு பதவியில் இருந்த அரசாங்கங்கள் போரை நிறுத்தி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக, புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த எடுத்த அத்தனை முயற்சிகளையும் ஜே.வி.பி. ஏதிர்த்த அதே நேரத்தில், அரசாங்கம் மேற்கொண்ட இனவாத யுத்தத்துக்கு இராணுவத்துக்கு சிங்கள இளைஞர்களைத் திரட்டிக் கொடுக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வந்துள்ளது.

முஸ்லீம் மக்களை இலங்கையின் தேசிய இனங்களில் ஒன்றாக ஜே.வி.பி. ஏற்றுக் கொள்ளாததுடன், வடக்கு கிழக்கில் வாழ்கின்ற முஸ்லீம் மக்களுக்கென நிலத் தொடர்பற்ற பிராந்திய சபையொன்றை உருவாக்க வேண்டும் என்ற அவர்களது கோரிக்கையையும் ஜே.வி.பி. எதிர்த்தே வந்திருக்கிறது.

இலங்கையில் வாழ்கின்ற சிறுபான்மை இனங்களுக்கு இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை, அவர்களுக்கு இருப்பது பொருளாதாரப் பிரச்சினையே என்பதுதான், ஜே.வி.பியின் அன்றிலிருந்து இன்று வரையிலான கொள்கை. எனவே, அவர்களது பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்து சமத்துவமாக நடத்தினால் போதும் என்பதே ஜே.வி.பியின் நிலைப்பாடு. அதனால்தான் அது சிறுபான்மை இனங்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்குவதற்காக கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட அத்தனை முயற்சிகளையும் எதிர்த்து வந்திருக்கிறது.

இலங்கையில் வாழ்க்கின்ற அத்தனை இனங்களும் தேசிய இனங்கள்தான் என்பதையோ, அவர்களுக்கு சுய நிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கான உரிமை உண்டென்பதையோ ஜே.வி.பி. ஒருபோதும் ஏற்றுக் கொண்டதில்லை. இனிமேலும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

“எல்லோரும் சமம்” என்ற போலிச் சுலோகத்தின் கீழ், சிறுபான்மை இனங்களின் உரிமைப் போராட்டங்களை மிகவும் சூட்சுமமான முறையில் நீர்த்துப்போகச் செய்வதே ஜே.வி.பி. போட்டுள்ள திட்டமாகும்.

இத்தகைய ஒரு சூழலில்தான், ‘அவலை நினைத்து உரலை இடித்தது போல’ சிறுபான்மை இனங்கள் ஜே.வி.பி. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் மேலான பெரும்பான்மை பெறுவதற்காக வாக்களித்திருக்கின்றனர். ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசு சிறுபான்மை இனங்களுக்கு எதிராக மிக விரைவில் செயல்படும் போதுதான், அவர்கள் தாம் விட்ட மாபெரும் தவறை உணர்வார்கள்.

இருந்தும் என்ன? குதிரை ஓடிய பின்னர் கடிவாளத்தைத் தேடியோ, லாயத்தை அடைத்தோ எவ்விதப் பயனும் ஏற்படப் போவதில்லை.

# ஐரோப்பிய நாடுகளுக்கான இந்திய பெற்றோலிய ஏற்றுமதி அதிகரித்துள்ளது!

இந்தியா ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வரும் பெற்றோலியப் பொருட்களின் அளவு இந்த வருடம் (2024) முதல் மூன்று காலாண்டுகளில் 58 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாக எரிசக்தி மற்றும் தூய்மையான வளிமண்டலத்துக்கான ஆய்வு நிலையம் (Centre for Reseach on Energy and Clean Air) தெரிவித்திருக்கிறது.

இந்தப் பெற்றோலியப் பொருட்களை இந்தியா ரஸ்யாவிலிருந்து இறக்குமதி செய்யும் மசகு எண்ணெயில் இருந்து தயாரித்து ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு திரும்பவும் ஏற்றுமதி செய்கிறது.

2022 இல் ஏற்பட்ட ரஸ்ய – உக்ரைன் மோதலைத் தொடர்ந்து, ரஸ்யாவின் உற்பத்திப் பொருட்களை ஏனைய நாடுகள் வாங்குவதற்கு அமெரிக்காவும் ஏனைய முன்னணி ஐரோப்பிய நாடுகளும் தடை விதித்திருப்பதால் ~ இந்தியாவுக்கும் இந்தத் தடை பொருந்தும் என்ற போதிலும் ~ இந்தியா அதையும் மீறி இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ரஸ்ய மசகு எண்ணெயை வாங்கி சுத்திகரித்து ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு விற்பனை செய்வதன் மூலம் அதிக இலாபம் ஈட்டி வருகின்றது.

இந்தியா ரஸ்யாவிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்களில் 77 சதவீதம் மசகு எண்ணெய் என கணிப்பிடப்பட்டுள்ளது. அதன் பெறுமதி 2 பில்லியன் டொலர்களாகும்.

மேற்கு நாடுகள் ரஸ்யப் பொருட்களை வாங்குவதற்கு தடை விதித்திருந்தாலும், அந்தத் தடையை இந்தியா நிராகரித்துள்ளது. ஒரு நாடு தனது மக்களின் தேவை கருதி நடைமுறை சார்ந்த கொள்கையைப் பின்பற்றுவதில் தவறு இல்லை என இந்தியா தனது நிலைப்பாட்டுக்கு நியாயம் கற்பித்து வருகின்றது. உலகின் அதிக மக்கள் தொகை கூடிய நாடான இந்தியா, எரிபொருள் நுகர்வில் உலகின்

**தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க...**

**முன்பக்கத்தொடர்ச்சி...**

தேர்தல் முறையால் சிறுபான்மை இனக் கட்சிகளுக்கும், சிறிய கட்சிகளுக்கும் நன்மை உண்டு எனக் கண்ட ஜே.வி.பி. உட்பட பல கட்சிகள் அதற்கான தமது எதிர்ப்பைக் கைவிட்டு விட்டன.

மறுபக்கத்தில், இந்த அரசியல் அமைப்பு எதேச்சாதிகாரமானது எனவும், தாம் அதிகாரத்துக்கு வந்தால் இந்த அரசியல் அமைப்பை நீக்கிவிட்டு, அதிக ஜனநாயகத்தன்மையுள்ள ஒரு புதிய அரசியல் அமைப்பைக் கொண்டு வருவோம் எனச் சொன்ன சந்திரிக குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன போன்றவர்கள் கூட ஜனாதிபதியான பின்னர் இந்த அரசியல் அமைப்பை நீக்குவதற்கு துளியளவு கூட முயற்சி எடுக்கவில்லை.

இந்த நிறைவேற்று ஜனாதிபதி முறையிலான அரசியல் அமைப்பை நீக்க வேண்டும் என வலியுறுத்தியவர்களில் இன்றைய தேசிய மக்கள் சக்தியின் தலைமைக் கட்சியான ஜே.வி.பியும் உள்ளடங்கும்.

இன்று அத்தகைய ஒரு சந்தர்ப்பம், அதாவது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பலம், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு கிடைத்திருக்கிறது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தற்போது நடைமுறையில் உள்ள மக்கள் விரோத, எதேச்சாதிகார அரசியல் அமைப்பை நீக்கிவிட்டு, நாடாளுமன்றத்துக்கு முழுமையான அதிகாரமுள்ள, கூடுதலான ஜனநாயகத் தன்மை வாய்ந்த ஒரு புதிய அரசியல் அமைப்பை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கொண்டு வருமா என்பதே இன்றைய கேள்வியாகும்.

இன்றைய அரசியல் அமைப்பை மாற்ற வேண்டிய தேவை அதன் எதேச்சாதிகாரத் தன்மை காரணமாக மட்டுமல்ல, இந்த அரசியல் அமைப்பு சிங்கள – பௌத்த மேலாதிக்கத்தை முதன்மைப்படுத்தும், சிறுபான்மை இனங்களை இரண்டாம் இடத்தில் வைக்கும் ஓர் அரசியல் அமைப்புமாகும்.

எனவே, தம்மை சமதர்மவாதிகள் எனச் சொல்லிக் கொள்ளும் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போதைய எதேச்சாதிகார, மக்கள் விரோத அரசியல் அமைப்பை நீக்கி ஒரு வரலாற்றுச் சாதனையை நிகழ்த்துமா என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

# காஸா: பாசிமணிகள், உயில், இனக்கொலை!


காஸாவின் வடபகுதி, இனி பலஸ்தீன மக்கள் வாழக்கூடிய நிலமாக இருக்காது என்று, வட காஸாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக உள்ள இராணுவத் தளபதி இட்சிக் கோஹென் (Itzik Cohen) அறிவித்துள்ளதாக இஸ்ரேலிய செய்தியேடு 'ஹாரெட்ஸ்' (Haaretz) கடந்த (நவம்பர் மாதம்) 8 ஆம் திகதி இதழில் கூறியுள்ளது.

இஸ்ரேலின் மேலிடத்திலிருந்து தனக்கு வந்துள்ள கட்டளை – 'தளபதிகளின் திட்டம்' (General's Plan) என்றழைக்கப்படும் இராணுவத் திட்டத்தின்படி – காஸாவின் வட பகுதிக்கு இனி எந்தப் பலஸ்தீனர்களும் திரும்பிவர அனுமதிக்கக்கூடாது என்பதால் "இந்தப் பகுதியை சுத்திகரிப்பதுதான் இனி என் வேலை" என்று கூறியுள்ளார் கோஹென்.

வட காஸாவிலுள்ள ஜபாலியா (Jabalia), பெய்த் ஹனுன் (Beit Hanoun), பெய்த் லாஹியா (Beit Lahiya) ஆகிய இடங்களிலிருந்து மக்கள் காஸாவின் தென் பகுதிக்குப் புலம் பெயர்ந்துவிட்ட நிலையில், ஜபாலியாவில் மட்டும் இன்னும் சில பலஸ்தீனர்கள் இருப்பதாகவும், அவர்களுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கப்படுவது தொடர்ந்து அனுமதிக்கப்படுகின்றது என்றும், ஆனால் அவர்கள் அங்கிருந்து வெளியேறுவதைத் தடுக்கும் பொருட்டு ஹமாஸ் அமைப்பு அவர்களுக்குக் கறாரான உத்தரவு போட்டு, தண்ணீரோ உணவோ அவர்களுக்குக் கிடைக்கச் செய்யாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது என்றும், அங்கிருந்து வெளியேற முயல்கின்ற பல பலஸ்தீனர்களை அந்த அமைப்பு சுட்டுக் கொன்றுவிட்டதாகவும் இஸ்ரேலியப் பாதுகாப்புப் படைத் தளபதிகள் கூறுவதாக 'தி கார்டியனை' (The Guardian) மேற்கோள் காட்டி 'ஹாரெட்ஸ்' செய்தியேடு சொல்கிறது.

'போர்க் காலத்தில் முதலில் பலியாவது உண்மைதான்' என்று வின்ஸ்டன் சேர்ச்சில் (Winston Churchill) கூறியது மிகச் சரியானது என்பதை காஸா நிகழ்வுகள் காட்டுகின்றன.

ஆனால், இஸ்ரேலியப் பாதுகாப்பு படை விமானக் குண்டு வீச்சுகள் மூலமும் ட்ரோன்கள் மூலமும் பலஸ்தீனக் குழந்தைகளைக் குறிவைத்துக்





கொன்று வருவதை அங்கு மனிதாபிமான உதவிகளைச் செய்ய முயலும் அமைப்புகள் சுட்டிக் காட்டுகின்றன. நமது இதயத்தைக் கனக்கச் செய்யும் வகையில் ஒரு நிகழ்வு இந்த மாதத் தொடக்கத்தில் நிகழ்ந்துள்ளது.

இஸ்ரேலிய போர் விமானங்களும் ட்ரோன்களும் குறிவைக்கும் குழந்தைகளிலொன்று – பத்து வயதுச் சிறுமி, Rasha – தனக்கும் சாவு வந்துவிடும் என்று கருதி ஓர் 'உயிலை' எழுதி வைத்ததாக 'அல் ஜஸீரா' (Al-Jazeera) நாளேட்டில் சில வாரங்களுக்கு முன் வெளியான செய்தி கூறியது. தான் இறந்துவிட்டால் தன் விளையாட்டுப் பொம்மைகளும் பாசிமணிகள் உள்ள பையும் தன் சகோதர சகோதரிகளில் யார் யாருக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதை அந்த உயிலில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தது அக்குழந்தை.

**எஸ்.வி.ராஜதுரை**

அது எதிர்பார்த்தது போலவே, சில நாள்களுக்குப் பின் இஸ்ரேலிய விமானக் குண்டு வீச்சில் அந்தக் குழந்தையும் அவளது இளைய சகோதரனும் கொல்லப்பட்டுவிட்டனர். அந்த குழந்தையின் முகம் முற்றிலும் சிதைக்கப்பட்டிருந்தது என்றும், இருவரின் உடல்களைப் புதைக்கும்போதுதான் அந்த உயிலை அக்குழந்தையின் பெற்றோர்கள் கண்டறிந்தனர் என்றும் அச்செய்தி கூறியது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான உதவிக் குழுக்கள் மீதும் இஸ்ரேலியப் பாதுகாப்புப் படை தாக்குதல் நடத்திப் பலரைக் கொன்றுள்ளது. வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் வட காஸாவில் அனுமதிக்கப்படாத நிலையில் 55,000 பலஸ்தீனர்கள் ஏற்கெனவே காஸாவின் தென் பகுதிகளுக்குப் புலம் பெயர்ந்துவிட்டதாக இஸ்ரேலியப் பாதுகாப்பு படையே ஒத்துக்கொள்கிறது.

வடகாஸாவில் இன்னும் இருக்கின்ற பலஸ்தீனர்களோ அல்லது அங்கிருந்து வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டவர்களோ இனி ஒரு காலத்திலும் திரும்பிவர அனுமதிக்கப்பட்டாலும், அங்கே அவர்களால் வாழ முடியாத நிலையை இஸ்ரேலியப் பாதுகாப்புப் படை உருவாக்கியுள்ளது. மக்களின் வசிப்பிடங்களாக இருந்த குடியிருப்புக் கட்டடங்கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. சாகுபடி நிலங்கள் நச்சூட்டப்பட்டுள்ளன. நீர் ஆதாரங்கள், மருத்துவ மனைகள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், திருச்சபைகள், மசூதிகள் ஆகிய அனைத்தையும் இஸ்ரேலியப் பாதுகாப்பு படை அழித்து நாசமாக்கியுள்ளது.

கட்டடங்கள் முதலியவற்றை சீரமைப்பு செய்வதற்கு மிக நீண்டகாலம் பிடிக்கும். பல பில்லியன் டொலர்கள் தேவைப்படும். அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டக்கூடிய அளவுக்கு செல்வம் படைத்த பணக்கார வளைகுடா நாடுகள் அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிந்து போய்விட்டன. தென்னாப்பிரிக்கா, இந்த இன சுத்திகரிப்பை சர்வதேச நீதிமன்றத்திடம்

எடுத்துச் சென்று வழக்காடியது. இந்தக் குற்றத்தை இஸ்ரேல் செய்துள்ளது என்பதை ஒருமனதாக ஏற்றுக் கொண்ட அந்த நீதிமன்ற நீதிபதிகள் கூட வாய்மூடி மௌனம் காக்கிறார்கள்.

நம் கண் முன்னே நிகழ்ந்து கொண்டிருக்கும் பேரழிவைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறு ஏதும் செய்ய முடியாமல் இருக்கும் நிலையில்தான் உலக மக்கள் இருக்கின்றனர். அவர்களும் பல்வேறு நாடுகளில் பேரணிகளை அடுத்தடுத்து நிகழ்த்திவிட்டு சோர்வடைந்து விட்டனர்.

*1948* ஆம் ஆண்டு முதல் சென்ற ஆண்டு வரை, பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டம் இஸ்ரேலின் ஒடுக்குமுறைகளுக்குத் தாக்குப்பிடித்து நின்றது. அவர்களை உற்சாகப்படுத்த எத்தனையோ கவிஞர்கள் தோன்றினர்.

ஆனால், இன்று அந்தக் கவியுலகமும் கூட அழிந்து வருவதுபோல் தோன்றுகிறது.

அதற்குச் சான்றாக இருக்கிறது பின்வரும் கவிதை.

இதை எழுதிய அடுத்த நாளே ரே:.பாற் அல்–அரீர் (Refaat al-Areer) என்ற கவிஞரும் இஸ்ரேலியக் குண்டுவீச்சுக்குப் பலியானார்.

**நான் இறந்தாக வேண்டும்**
**நான் இறந்தாக வேண்டுமென்றால்**
**நீ வாழ்ந்தாக வேண்டும்**
**என் கதையைச் சொல்வதற்கு**
**என் பொருள்களை விற்பதற்கு**
**ஒரு துண்டுத் துணியையும்**
**சில மென்கயிறுகளையும் வாங்குவதற்கு**
**(அதை நீண்ட வாலும்**
**வெண்ணிறமும் கொண்டதாகச் செய்)**

**அப்போது காஸாவின் ஏதோ ஓரிடத்தில்**
**கண்ணில் வானத்தைப் பார்த்துக்**
**கொண்டிருக்கையில்**
**எவரிடமும் விடை பெறாமல்**
**தன் தசையிடமிருந்தும்கூட**
**விடை பெறாமல் தன்னிடமிருந்தும்கூட**
**விடை பெறாமல்**
**பெருந்தீயை விட்டுசென்ற**
**தன் தந்தைக்காகக்**
**காத்துக் கொண்டிருக்கையில்**
**பட்டம், நீ செய்த பட்டம்**
**மேலே பறந்து கொண்டிருப்பதை**
**பார்ப்பதற்கும்**

**அன்பைத் திருப்பிக் கொண்டு**
**வருகின்ற**
**ஒரு தேவதூதன்**
**அங்கிருப்பதாக**
**ஒரு கணம் நினைத்துக் கொள்ளவும்**
**நான் இறந்தாக வேண்டும்**

**அது நம்பிக்கையைக்**
**கொண்டு வரட்டும்**
**அது ஒரு கதையாக இருக்கட்டும்.**

---

**16ம் பக்கத்தொடர்ச்சி...**

வேண்டும். அப்படி வந்தவர்கள் என்ன தன்மை மாற்றத்தைச் செய்துள்ளார்கள்?

இலங்கையில் பிரித்தானிய காலனித்துவவாதிகளால் வடிவமைக்கப்பட்டு, பின்னர் அவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றி ஆட்சிக்கு வந்த முதலாளித்துவ ஆட்சியாளர்களால் சிறு சிறு மாற்றங்களுடன் பேணப்பட்டு வந்த முதலாளித்துவ பாராளுமன்ற முறை, நிர்வாக முறை, நீதித்துறை, நிதிக்கட்டமைப்பு, கல்வி கலாச்சார ஒழுங்குமுறை, ஆயுதப்படைகளின் கட்டமைப்பு, சிறைச்சாலை முறைமை போன்றன தேசிய மக்கள் சக்தி ஆட்சியிலும் அப்படியே பேணப்படுகின்றன. இந்த முறைமைகள் எல்லாமே மேல்தட்டு வர்க்கங்களின் நலன்களைப் பேணுவதற்காக உருவாக்கப்பட்டவை. இவற்றில் மக்கள் நலனுக்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் என்ன தன்மை மாற்றத்தைச் செய்துள்ளது? அல்லது செய்ய உத்தேசித்துள்ளது?

தமது அரசியல் நலன்களுக்காக முன்னைய அரசாங்கத்தில் அங்கம் வகித்த சில அரசியல்வாதிகள் அல்லது நிர்வாக உத்தியோகத்தர்கள் மீது முறைகேடாக நடந்தார்கள் எனக் குற்றம் சாட்டி நடவடிக்கைகள் எடுப்பதோ, அரசாங்க நிர்வாகங்களின் சில அநாவசிய செலவினங்களைக் குறைப்பதோ, அரசின் தன்மை மாற்றம் ஆகி விடுமா? இந்த நடவடிக்கைகள் தற்போது இருக்கும் முதலாளித்துவ அரசுக் கட்டமைப்பில் உள்ள ஓட்டைகளுக்கு ஒட்டுப்போட்டு, அந்த அமைப்பைத் தொடர்ந்து பேணும் நடவடிக்கை மட்டுமே என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஜே.வி.பி. போன்ற முதலாளித்துவ சீர்திருத்தவாதிகள் லெனின் ரஸ்யாவில் புரட்சி நடத்திய 1917 ஆம் ஆண்டுக் காலகட்டத்திலும் இருந்தபடியால்தான், அவர் எழுதிய பிரசித்தி பெற்ற ‘அரசும் புரட்சியும்’ என்ற நூலில், தற்பொழுது நடைமுறையில் உள்ள முதலாளித்துவ அரசு இயந்திரத்தை கம்யூனிஸ்ட்டுகள் அப்படியே கையேற்று ஒரு சோசலிச அரசை நிறுவ முடியாது என்றும், முதலாளித்துவ அரசு இயந்திரத்தை அடித்து நொருக்கி சுக்கு நூறாக்கி, அதன் இடத்தில் முற்றிலும் புத்தம் புதிய ஒரு பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான சோசலிச அரசு இயந்திரத்தை நிறுவ வேண்டும் எனவும் விளக்கிக் கூறியதுடன், அத்தகைய ஒரு அரசை நிறுவுவதற்கு சோசலிசப் புரட்சி ஒன்று அவசியம் எனவும் வலியுறுத்திக் கூறினார்.

இத்தகைய ஒரு பின்னணியில் வைத்துப் பார்க்கும் போது, இலங்கையில் தற்போது பதவிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை ஒரு சோசலிச அரசொன்றோ அல்லது குறைந்தபட்சம் ஓர் இடதுசாரி அரசொன்றோ சொல்ல முடியுமா?

---

**4ம் பக்கத்தொடர்ச்சி...**

மூன்றாவது பெரிய நாடாக இருக்கின்றது.

இந்தியாவின் வர்த்தகத் தலைநகரான மும்பையில் நடைபெற்ற இந்திய – ரஸ்ய வர்த்தக உச்சி மாநாட்டில் பேசிய இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், நிச்சயமற்ற நிலை நிலவும் இன்றைய உலகில் இரு நாடுகளுக்கும் பயனுள்ள வகையில் எரிபொருள் துறையில் நீண்டகால ஒத்துழைப்பை ரஸ்யாவுடன் கட்டியெழுப்ப இந்தியா விரும்புவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டில் இந்தியாவின் ரஸ்யாவுடனான வர்த்தகம் 65 பில்லியன் டொலர்கள் கொண்டதாக 80 சதவீதத்தை எட்டி நிற்கிறது. இந்தியாவின் மொத்த மசகு எண்ணெய் இறக்குமதியில் ரஸ்யாவிலிருந்து இறக்குமதி செய்யும் தொகை 40 சதவீதமாகும்.

இந்தியா மேற்கு நாடுகளின் தடையையும் மீறி ரஸ்யாவுடன் தொடர்ந்தும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதினால் ஆத்திரமடைந்த உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கியும் ஏனைய மேற்கு நாடுகளும், ரஸ்ய – உக்ரைன் மோதலில் இந்தியா உண்மையான நடுநிலைமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், ரஸ்யா மீது மேற்கு நாடுகள் விதித்துள்ள தடைகளை மதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றன.

# தீண்டாமைக்கும் சாதியமைப்புக்கும் எதிரான 1966 ஒக்ரோபர் 21 எழுச்சி!

இலங்கைத் தீவிலேயே மிகவும் இறுக்கமான சாதியமைப்பு பேணும் பிரதேசமாக யாழ்ப்பாணக் குடாநாடு இருந்து வருகிறது. இன்று அதன் வீச்சு சற்றுக் குறைந்துவிட்டாலும், இன்னமும் அதன் இறுக்கம் தளரவில்லை.

குறிப்பாக தீண்டாமை என்ற வடிவம் சற்றுக் குறைந்திருக்கிறதே ஒழிய, சாதியமைப்பின் இறுக்கம் தளரவில்லை. அதன் இன்றைய நிலையை அடைவதற்குக்கூட தாழ்த்தப்பட்ட மக்கள் பல நூற்றாண்டுகளாக, பல்வேறு விதமான வடிவங்களில், எண்ணற்ற போராட்டங்களை நடத்த வேண்டி இருந்தது. அந்தப் போராட்டங்களின் போது, அந்தப் போராட்டங்களில் ஈடுபட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் போராளிகளில் பலர் உயர்சாதி வெறியர்களின் தாக்குதல்களினாலும், அவர்களுக்குத் துணை நின்ற அரசு இயந்திர ஏவலர்களாலும் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

முன்னைய காலங்களில் பல நூற்றாண்டுகளாக, தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் பின்வரும் வடிவங்களில் கோலோச்சின:

தாழ்த்தப்பட்ட மக்கள் சொந்தமாக நிலம் வைத்திருக்க முடியாது. உயர் சாதியைச் சேர்ந்தவர்கள் வழங்கும் அவர்களது காணிகளிலேயே ஓலைக் குடிசைகளைக் கட்டி வாழ வேண்டும்.

உயர்சாதியைச் சேர்ந்தவர்களின் கூலி அடிமைகளாகவே அவர்கள் இருந்தனர். அவர்கள் கொடுப்பதை வைத்தே (பெரும்பாலும் அவர்களது நிலங்களில் விளையும் தானியங்கள் மற்றும் கிழங்கு வகைகள்) தமது வாழ்க்கையை சிரமப்பட்டு ஓட்டினர்.

தாழ்த்தப்பட்ட பெண்கள் மேல்சட்டை அணிய முடியாது. ஆண்கள் முழங்காலுக்கு கீழே கணுக்கால் வரை உடை அணியக்கூடாது.

உயர்சாதியினர் வசிக்கும் வீதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் உலவ முடியாது. அப்படி அவசியம் போக வேண்டுமாயின் அவர்களின் கண்களில் படாத அதிகாலையிலேயோ அல்லது இரவிலோதான் செல்ல வேண்டும். அப்படிச் செல்லும் போதும், தமது வருகையை அறிவிக்கவும், தமது



காலடியை அழிக்கவும் பனையோலை ஒன்றை இழுத்துச் செல்ல வேண்டும்.

உயர் சாதியினர் வணங்கும் கோயில்களுக்குச் சென்று தாழ்த்தப்பட்ட மக்கள் வணங்க முடியாது.

தாழ்த்தப்பட்ட மக்களின் பிள்ளைகள் பாடசலைகளில் கல்வி கற்க முடியாது. பின்னர் கற்க அனுமதிக்கப்பட்ட காலங்களிலும் உயர் சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகளுடன் ஒன்றாக ஆசனங்களில் அமர்ந்து கல்வி கற்க முடியாது.

தாழ்த்தப்பட்ட மக்கள் சொந்தமாக கிணறுகள் வைத்திருக்க முடியாது. பொதுக் கிணறுகளில் தண்ணீர் அள்ளவும் முடியாது. உயர் சாதியினர் தண்ணீர் அள்ளி ஊற்றினால் மட்டுமே அவர்களுக்கு தண்ணீர் கிடைக்கும்.

***சுப்பராயன்***

தாழ்த்தப்பட்ட மக்கள் சொந்தமாக வாகனங்கள் வைத்திருக்க முடியாது. பொதுப் போக்குவரத்து வாகனங்களில் உயர்சாதி மக்களுடன் ஒன்றாக அமர்ந்து பயணம் செய்ய முடியாது.

திருமணச் சடங்குகள் செய்யவோ, தாலி கட்டவோ முடியாது.

உயர் சமூகத்தவர்களுக்கு சலவை செய்பவர்களிடமோ, சவரம் செய்பவர்களிடமோ, தாழ்த்தப்பட்ட மக்கள் சேவையைப் பெற முடியாது.

மரணச் சடங்குகளின் போது மேளம் அடிக்கக்கூடாது.

தமது பிள்ளைகளுக்கு உயர் சமூகத்தினர் பயன்படுத்தும் பெயர்களை வைக்கக்கூடாது. உதாரணமாக, உயர் சமூகத்தினர் தமது பிள்ளைகளுக்கு கந்தையா, வேலுப்பிள்ளை எனப் பெயர்கள் வைத்தால், தாழ்த்தப்பட்ட மக்கள் தமது பிள்ளைகளுக்கு அதே பெயர்களை கந்தன், வேலன் என்றுதான் வைக்க வேண்டும். உயர் சாதியைச் சேர்ந்த பிறப்புப் பதிவாளர்கள் அவ்வாறுதான் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் பதிவார்கள்.

இவையும், இவை போன்ற வேறு பல அடக்குமுறை நடவடிக்கைகளும் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது உயர்சாதி சமூகத்தினரால் விதிக்கப்பட்டிருந்தன.

ஆனால் இவற்றில் பல நிலைமைகள் இன்று மாறிவிட்டன. அவ்வாறு மாறியமைக்கு காரணம் தாழ்த்தப்பட்ட மக்கள் தொடர்ச்சியாக நடத்திய போராட்டங்களும், இலங்கையில் பாராளுமன்ற முதலாளித்துவ ஜனநாயகத்தின் கீழ் ஏற்பட்ட மாற்றங்களும்தான். அவ்வாறான மாற்றங்களில் சர்வஜன வாக்குரிமையும், இலவசக் கல்வியும் கிடைத்தமை முக்கியமான காரணங்களாகும். அத்துடன், பண்டாரநாயக்க அரசுகள் மேற்கொண்ட சமூக குறைபாட்டு ஒழிப்புச் சட்டம், காணிச் சீர்திருத்தச் சட்டம் என்பனவும் பிற காரணிகளாகும்.

போராட்ட வழி முறைகளை எடுத்துப் பார்த்தால், தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக தாழ்த்தப்பட்ட மக்கள் மூன்று வழிகளில் போராடியிருக்கிறார்கள் என்பதை, இப்பொழுது அவர்களது வரலாற்றை எடுத்துப் பார்க்கையில் அறிய முடிகிறது.

அதில் முதலாவது வழி சாத்வீக முறையிலானது. இந்தியாவில் காந்தி பின்பற்றிய சாத்வீக வழியின் தாக்கத்தால் இது ஏற்பட்டது. இந்த வழியின் பிரதான அம்சங்களாக அரச அதிகாரிகளிடம் தமது பிரச்சினைகள் குறித்து முறையிடுவது. மகஜர்கள் கையளிப்பது என்பனவே பெரும்பாலும் இருந்துள்ளன.

இரண்டாவது வழி, மத மாற்றம். இந்த வழி இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவரான டாக்டர் அம்பேத்கர் காட்டிய வழியைப் பின்பற்றி நடந்தது. அதாவது, இந்து மதமே சாதியத்தின் அத்திவாரம் எனக் கண்ட அம்பேத்கர், இந்தியாவிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களை பௌத்த மதத்துக்கு மாறும்படி ஆலோசனை கூறினார். அதைப் போலவே, இலங்கையின் வட பகுதியில் இருந்த தாழ்த்தப்பட்ட மக்களில் சிலரை அவர்களின் சில தலைவர்கள் பௌத்த மதத்துக்கு மாற்றினார்கள். ஆனால் அதனால் வட பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி கற்பதற்கென சில பௌத்த பாடசாலைகள் உருவாக்கப்பட்டதைத் தவிர வேறு எதனையும் சாதிக்க முடியவில்லை.

அதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், 1956 தேர்தலில் பருத்தித்துறை தொகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தோழர் பொன்.கந்தையா தனி ஒருவராக நின்று அன்றைய பண்டாரநாயக்க அரசாங்கத்தின் மூலம் வடமராட்சியில் தாழ்த்தப்பட்ட மற்றும் வறிய மக்கள் வாழ்ந்த பகுதிகளில் சுமார் 16 பாடசாலைகள் வரை உருவாக்கியுள்ளார் என்பது மிகப்பெரிய சாதனை என்றே கூற வேண்டும்.

மூன்றாவது வழிதான் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வில் பல உரிமைகளை வென்றெடுத்துக் கொடுத்த புரட்சிகர போராட்ட வழி முறையாகும். இந்த வழிக்கான பயணத்திற்கு கால்கோள் இட்ட நாள்தான் 1966 ஒக்ரோபர் 21ஆம் திகதியாகும். இந்தக் கட்டுரையின் நோக்கமும் அந்த வரலாற்றை சுருக்கமாகவேனும் சொல்வதுதான்.

தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னைய போராட்டங்களுக்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உறுதியான ஆதரவைத் தெரிவித்ததுடன், சில வழிகாட்டல்களையும் வழங்கியிருந்த போதிலும், 1966 ஒக்ரோபர் 21இல் ஆரம்பமான புரட்சிகர வழியிலான போராட்டத்துக்குத்தான் சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி என முதலாளித்துவ ஊடகங்களால் அழைக்கப்பட்ட புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் நேரடியான தெளிவான வழிகாட்டல் இருந்தது.

இந்தப் போராட்டம் உருவான சூழலைப் பார்ப்பது முதலில் அவசியமானது.

1965 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி டட்லி சேனநாயக்கவை பிரதமராகக் கொண்டு ஏழு கட்சி கூட்டரசாங்கம் ஒன்றை அமைத்தது. இந்தக் கூட்டரசாங்கத்தில் ஏகாதிபத்திய சார்பு பிற்போக்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் வர்க்க அடிப்படையில் எப்பொழுதும் நெருக்கமான அரசியல் உறவு கொண்டிருந்த தமிழ் காங்கிரஸ் கட்சியும், தமிழரசுக் கட்சியும் இணைந்து கொண்டு, முன்னையது உதவி சபாநாயகர் (மு.சிவசிதம்பரம்) பதவியையும், பின்னையது அமைச்சர் (மு.திருச்செல்வம்) பதவியையும் பெற்றுக்கொண்டன.

வட பகுதியில் இருந்த வேளாள சாதி மேட்டுக் குடியினரைப் பிரதிநிதித்துவப்படுத்திய இந்த இரண்டு பிற்போக்குவாத தமிழ்க் கட்சிகளும் அரசின் பங்காளிகளானதும் அந்த உயர்சாதி மேட்டுக் குடியினரின் ஆதிக்க சிந்தனையும் நடவடிக்கைகளும் மேலோங்கத் தொடங்கின. அவர்கள் வழமையாக வடக்கில் வாழ்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் மேல் மேற்கொண்டிருந்த அடக்குமுறையையும் ஒடுக்குமுறையையும் அதிகரிக்கத் தொடங்கினர்.

தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருந்த உயர் சாதியினரின் காணிகளில் இருந்து எழுப்பப்பட்டனர். அவர்களுக்கு கள் இறக்குவதற்கு உயர் சாதியினரால் வழங்கப்பட்டு வந்த பனை, தென்னை மரங்கள் வழங்கப்படாது நிறுத்தப்பட்டதுடன், அவர்கள் கள் இறக்கிய மரங்களின் பாளைகளும் கூலிக்கமர்த்தப்பட்டவர்களால் வெட்டி எறியப்பட்டன. பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட பிள்ளைகள் மீது காட்டப்பட்டு வந்த சாதிப்பாகுபாடு அதிகரிக்கப்பட்டது. சில இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது, குறிப்பாக இளைஞர்கள் மீது, தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

இதனால் எழுந்த நிலைமைகள் குறித்து ஆராய்வதற்கென அச்சுவேலியில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த நல்லதம்பி என்பவருக்குச் சொந்தமான சினிமா கொட்டகையில் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்துக்கு சகல அரசியல் கட்சிகளுக்கும், பொது அமைப்புகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. கூட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் அன்று எதிர்நோக்கிய பிரச்சினைகள் விரிவாக ஆராயப்பட்டதுடன், அவர்களை உயர் சாதி வெறியர்களின் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பதற்கான அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

பிரதான தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் சாக்குப்போக்காக கூட்டத்தில் கலந்து கொண்ட போதும், அவர்கள் தமக்கு அரசாங்கத்தில் உள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி தாழ்த்தப்பட்ட மக்களைப் பாதுகாக்க முன்வரவில்லை.

இந்தச் சூழ்நிலையில்தான், கூட்டத்தில் கலந்து கொண்ட இலங்கை புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதரவு தெரிவித்து ஊர்வலம் ஒன்றை நடத்த முன்வந்தது. “சாதி அமைப்பு தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்” என்ற கோசத்துடன் 1966 ஒக்ரோபர் 21 ஆம் திகதி சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணம் வரை ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தவும், ஊர்வல முடிவில் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் பங்கெடுப்பதற்காக நூற்றுக்கணக்கான மக்கள் ஒக்ரோபர் 21ஆம் திகதி சுன்னாகத்தில் குவியத் தொடங்கினர். ஆனால் பொலிசார் ஊர்வலத்துக்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டனர். அவர்களது மறுப்பின் பின்னணியில் இரண்டு தமிழ்க் கட்சிகளும் இருந்ததாகப் பின்னர் அறிய வந்தது.

ஆனால் ஊர்வலத்துக்கென வந்த மக்கள் கலைந்துபோக மறுத்ததுடன், தடையை மீறி ஊர்வலமாக யாழ்ப்பாணம் நோக்கி செல்லவும்

முற்பட்டனர். அவர்களது முயற்சிக்கு புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேச தலைவர்கள் தலைமை கொடுத்தனர்.

ஊர்வலம் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டு வந்தபொழுது, சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் முன்னால் வைத்து அதில் வந்தவர்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதலை பொலிசார் மேற்கொண்டனர். இந்த தாக்குதலுக்காக சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொலிசாருடன் வேறு பல பொலிஸ் நிலையப் பொலிசாரும் வழவழைக்கபட்டிருந்தனர். சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த சிங்களவர் இந்தத் தாக்குதலை நடத்த விரும்பாமல் விடுமுறையில் சென்றுவிட, உதவிப் பொறுப்பதிகாரியாக இருந்த இராசையா என்ற சாதிவெறி பிடித்த பொலிஸ்காரர் ஊர்வலத்தினர் மீது தாக்குதல் நடத்துவதற்குத் தலைமை தாங்கினார்.

பொலிசார் தாக்குதல் நடத்தியும் ஊர்வலத்தில் வந்தவர்கள் கலைந்து செல்லாததால், வேறு வழியின்றி ஊர்வலத்துக்குத் தலைமைதாங்கி வந்த புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் வட பகுதி முக்கியஸ்தர்களான தோழர்கள் வி.ஏ.கந்தசாமி, கே.ஏ.சுப்பிரமணியம், இ.கா.சூடாமணி ஆகியோரைக் கைது செய்துவிட்டு, ஊல்வலத்தில் வந்தவர்களை இருவர் இருவராக யாழ்ப்பாணம் நடந்து செல்ல பொலிசார் அனுமதித்தனர். அதன் பின்னர் ஊர்வலத்தில் வந்தவர்கள் பொலிசாரின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக வாய்களை கறுப்புத் துணிகளால் கட்டிக்கொண்டு யாழ்ப்பாண நகரம் வரை சுமார் 6 மைல்கள் நடந்து சென்று, அங்கு நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்தச் சம்பவத்தின் பின்னர், வட பகுதி எங்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பது என புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானம் செய்து கொண்டது. அதன் அடிப்படையில் வட பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழிபாட்டுக்குத் திறந்து விடாத ஆலயங்களில் ஆலயப் பிரவேசப் போராட்டத்தை முன்னெடுப்பது எனவும், அதேபோல, தாழ்த்தப்பட்ட மக்கள் உட்பிரவேசிக்க முடியாதவாறு தடுக்கப்பட்டிருந்த தேநீர்க்கடைகளில் தேநீர்க்கடைப் பிரவேசம் செய்வதெனவும், பொதுக் கிணறுகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் தண்ணீர் அள்ளும் போராட்டத்தை நடத்துவது எனவும், புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானித்தது.

இந்தப் போராட்டத்தை தலைமையேற்று நடத்துவதற்கென, தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமின்றி, நீதியை விரும்பும் ஏனைய சமூகங்களைச் சேர்ந்த நல்லெண்ணம் படைத்தவர்களையும் உள்ளடக்கி, 'தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்' என்ற பெயரில் பரந்துபட்ட அமைப்பொன்றையும் கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கியது.

அதன் பின்னரான காலப்பகுதியில் வட பகுதியில் உள்ள பெரும்பாலான ஆலயங்களில் ஆலயப் பிரவேசப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அவற்றில் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில், அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் கோயில் போராட்டங்கள் முக்கியமானவை. இவற்றில் மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயப் பிரவேசப் போராட்டமே நீண்ட காலம் – 1969 பிற்பகுதி வரை ~ நடைபெற்ற போராட்டமாகும். இப்போராட்டத்தின் போது முன்னாள் வவுனியா பாராளுமன்ற உறுப்பினரும், அடங்காத் தமிழர் முன்னணித் தலைவருமான சி.சுந்தரலிங்கம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக சாதிவெறிக் குண்டர்களுக்கு நேரடியாகத் தலைமைதாங்கி நின்றார்.

அதேநேரத்தில் அந்தக் கோயில் அமைந்திருந்த காங்கேசன்துறை தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சித் தலைவருமான செல்வநாயகம் "நான் ஒரு கிறிஸ்தவன். இந்துக்களின் இப்போராட்டத்தில் தலையிட மாட்டேன்" என்று சொல்லி, மறைமுகமாக சாதி வெறியர்களின் பக்கம் நின்று கொண்டார்.

ஆலயப் பிரவேசப் போராட்டத்துடன், வட பகுதியெங்கும் இருந்த தேநீர்க்கடைகளில் பிரவேசப் போராட்டமும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டங்களின் போது சாதி வெறியர்கள் நடத்திய வன்முறைத் தாக்குதல்களில் 10 பேர் வரையிலான தாழ்த்தப்பட்ட போராளிகள் தியாகிகளாக வீர மரணம் அடைந்தனர். அதேபோல, தாழ்த்தப்பட்ட போராளிகள் நடத்திய தற்பாதுகாப்பு புரட்சிகரப் பதில் தாக்குதல்களில் 10 பேர் வரையிலான சாதி வெறியர்களும் மடிந்தனர்.

இந்த நிகழ்வுகளின் போது சங்கானைப் பகுதியில் இருந்த நிச்சாமம் கிராமம், மட்டுவில் பகுதியில் இருந்த மானாவளை கிராமம், நெல்லியடி பகுதியில் இருந்த கன்பொல்லை கிராமம், அச்சுவேலிப் பகுதியில் இருந்த நாவற்காடு கிராமம் என்பன தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டக் கோட்டைகளாகத் திகழ்ந்தன.

இலங்கை சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடுவதாகச் சொல்லிக்கொண்டு, முதலாளித்துவ தமிழ்க் கட்சிகளால் நடத்தப்பட்டு வரும் போராட்டங்கள் தொடர் தோல்வியைத் தழுவி வரும் சூழலில், ஒரு இடதுசாரி புரட்சிகர கட்சியால் முன்னெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மகளின் இந்த உரிமைப் போராட்டம் மட்டும் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றது என்றால், அதற்கான காரணம் சரியான செல்நெறியும் தலைமையும்தான் என்பதே உண்மையாகும்.

எனவே, இன்று தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதாகச் சொல்பவர்கள் அல்லது அதில் அவா கொண்டிருக்கும் இளையோர் சக்தி, 1960களில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் இந்தப் போராட்டத்தில் இருந்து பெறுமதியான பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

---

முதலாளித்துவம் தற்காலிகமாக ஓரளவு உறுதி அடையலாம், தன் உற்பத்தியினை அது திட்டமிடலாம். நாட்டின் அதிகாரத்தினை, நிர்வாகத்தினை அது பாசிசத்தின் கையில் மாற்றி விடலாம், தொழிலாளி வர்க்கத்தினைத் தற்காலிகமாக அடக்கலாம், ஆனால் அது (முதலாளித்துவம்) இதமாக, சுகமாக அனுபவித்து வந்த 'அமைதியினை'யும் 'உறுதியினை'யும் 'நிதானத்தை'யும் 'நிலைத்ததன்மை'யினையும் இனி எப்போதும் மீண்டும் பெறமுடியாது. ஏனென்றால் உலக முதலாளித்துவம், தவிர்க்க முடியாதபடி தனது முழுவளர்ச்சிக் கட்டத்தினை அடைந்துவிட்டது. இப்போது தவிர்க்க முடியாதபடி அதைப் புரட்சியின் தீக்கங்குகள் வெடித்து நொறுக்கியே தீரும்.

**–ஸ்டாலின்**

# குருப்ஸ்காயா – அசாதாரண பெண்மணி



"மிக மிக புரட்சிகரமான வர்க்கத்தை சார்ந்த இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்களின் உள்ளத்தை மார்க்சின் போதனை கவர்ந்தது ஏன் என்ற கேள்வியை நீங்கள் கேட்பீர்களேயானால், உங்களுக்கு ஒரே பதில்தான் கிடைக்கும். ஏனென்றால், முதலாளித்துவத்தின் கீழ், மனித குலம் பெற்ற அறிவின் திட்டமான அடிப்படையை மார்க்ஸ் ஆதாரமாகக் கொண்டார். மனித சமுதாயத்தின் வளர்ச்சி விதிகளை ஆராய்ந்த மார்க்ஸ், கம்யூனிசத்திற்கு இட்டுச் செல்லும் முதலாளித்துவத்தின் வளர்ச்சி தவிர்க்க முடியாதது என்பதை உணர்ந்தார். முந்தைய விஞ்ஞானம் தந்த அனைத்தையும் முற்றிலும் கற்று, முதலாளித்துவ சமுதாயத்தை மிகச் சரியாகவும், விரிவாகவும், ஆழமாகவும் ஆராய்ந்ததன் அடிப்படையில்தான் அவர் இவற்றை நிரூபித்தார் என்பது மிக மிக முக்கியமானது." –லெனின்.

குருப்ஸ்காயா ஒரு தலைசிறந்த கம்யூனிஸ்டாக திகழ்ந்ததற்கு அடிப்படையாக அமைந்தது, மார்க்சியத்தை நன்கு கற்று, அதை உள்வாங்கிக் கொண்டு, தனது அனுபவங்களுடன் பொருத்தி, செயல்பட்டவிதம் என்றால் அது மிகையாகாது. 26ந் திகதி, பெப்ரவரி மாதம் 1869 ஆம் ஆண்டு பிறந்த அவரின் தாய் ஒரு அநாதை. அவரின் தந்தை இராணுவத்தில் பணியாற்றினார். தனது தந்தையை பற்றி கூறுகையில், அவர் மிகவும் நேர்மையான மனிதர் என்று குறிப்பிடுகிறார்.

குருப்ஸ்காயாவிற்கு 14 வயது ஆகும் பொழுது அவருடைய தந்தை இறந்துவிட்டார். தாய், குழந்தைகளை பார்த்துக்கொள்ளும் பணியை செய்துவந்தார். சிறுவயது முதலே குருப்ஸ்காயா அடக்குமுறையை எதிர்த்தார். ரஷியர்கள் யூதர்கள்/போலிஷ் மக்களுக்கு எந்தவிதத்திலும் குறைந்தவர்கள் இல்லை என்பதை ஆழமாக உணர்ந்தார். ஜார் மன்னர் ஆட்சியின் கொடுமைகளை சிறுமியாக இருந்த பொழுதிலேயே எதிர்த்தார். அவருக்கு அவருடைய தாய்தான் அனைத்து விஷயங்களையும் கற்பித்தார்.

குருப்ஸ்காயாவின் தாய், கட்சி தோழர்களுடன் நெருங்கி பழகியதால், இயல்பாகவே குருப்ஸ்காயாவிற்கு முற்போக்கான சிந்தனைகள் ஏற்பட்டன. சிறு வயது முதல் புத்தகங்களை நேசித்தார். எப்பொழுதும் வாசிக்க விரும்பினார். லேவ் டால்ஸ்தாயின் நூல்கள் அவர் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. அவரது நூல்களில் பணக்கார/சோம்பேறிகளை எதிர்த்து விவசாயிகளும் / தொழிலாளிகளும் நடத்திய போராட்டங்கள் அவர் மனதில் நிறைய கேள்விகளை எழுப்பின. குருப்ஸ்காயா சிறந்த மாணவியாக திகழ்ந்தார். ஓர் ஆசிரியையாக பணி புரிய வேண்டும் என்ற கனவு அவருக்கு இருந்தது.

**பேராசிரியர் சந்திரா**

குருப்ஸ்காயா தனது வாசிப்பு பழக்கத்தை விடவே இல்லை. சற்று பெரியவளான பின்னர், வாசிப்பு குழுவில் இணைந்தார். அக்குழுவின் செயல்பாடு அவர் கண்களை திறந்தது எனலாம். மார்க்ஸின் நூல்களை அதிகம் வாசிக்க ஆரம்பித்தார். மார்க்ஸின் "மூலதனம்" நூலை புரிந்து கொள்ள மிகவும் கஷ்டமாக இருந்தது என அவர் கூறுகிறார். மீண்டும் மீண்டும் வாசித்து புரிந்து கொண்டார். (இன்றும் மூலதனம் நூலை, வாசிப்புக் குழு மூலம் கொஞ்சம் கொஞ்சமாக படித்து விவாதிக்கும் முறை கடைபிடிக்கப்படுகிறது. ஏற்கனவே நன்கு கற்ற ஒருவர் வழிகாட்டுதலுடன் வாசிப்பது அந்த நூலை நன்கு புரிந்து கொள்ள உதவும்) அத்துடன் தொழிலாளர்களின் போராட்டங்களை புரிந்துகொண்டு, அவற்றின் முக்கியத்துவத்தை அவர் உணர்ந்தார்.

இதைப் பற்றி குருப்ஸ்காயா கூறுகையில், "ஒருநாள் மாலை நேரத்தில் வீட்டு முற்றத்தில் அமர்ந்து 'முதலாளித்துவத்தின் சாவுமணி ஒலிக்கிறது. பறிமுதல் செய்பவர்கள் தாமே பறிமுதல் செய்யப்படுகிறார்கள்' என்ற வரிகளை படித்தேன். என் நெஞ்சு துடிதுடிப்பது நன்றாகக் கேட்டது. முற்றிலும் சிந்தனையில் மூழ்கி போயிருந்த நான், என்னருகே அந்த வீட்டுக்காரரின் குழந்தையை பார்த்துக் கொள்ள அமர்த்தப்பட்டிருந்த சிறுமி எதைப் பற்றி உளறிக் கொண்டிருக்கிறாள் என்பதை புரிந்து கொள்ளவில்லை… என் வாழ்நாளிலேயே அதை காண்பேன் என்ற எண்ணம் எனக்கு அப்பொழுது தோன்றவில்லை. குறிக்கோளும் அதற்கான பாதையும் எனக்கு தெளிவாக தெரிந்தது. அதுவே எனக்கு போதும்…
சோவியத்துகளின் இரண்டாம் மாநாட்டின் போதும் இது பற்றி சிந்தித்தேன். இன்னும் எவ்வளவு படிகளை தாண்டியாக வேண்டும்? கடைசி படியை காண நான் உயிர் வாழ்வேனா? அது எனக்கு தெரியாது. அது நடைபெறும் என்பது திண்ணம்" என தனது கட்டுரை ஒன்றில் குறிப்பிடுகிறார்.

5 ஆண்டுகள் மார்க்சின் நூல்கள் அனைத்தையும் குருப்ஸ்காயா நன்கு கற்றார். யாவரும் அவரது நண்பர்கள் சிலரும் சேர்ந்து மார்க்சின் பெயரை சொல்லாமல், மார்க்சீயத்தை கற்பிக்கும் பணியில் ஈடுபட்டனர். "தொழிலாளி வர்க்கத்தினருடன் என்றும் பிரிக்க முடியாதபடி நான் பிணைக்கப்பட்டேன்" என்று கூறுகிறார். அதன்பின்னர் குருப்ஸ்காயா சிறையில் அடைக்கப்பட்டார்.

ரஷ்யாவில் தீவிர மார்க்சியக் குழு ஒன்று உருவாகியது. ஜெர்மன் தொழிலாளர் கட்சியை மாதிரியாகக் கொண்டு அது சோஷியல்–

டெமாக்ரட்டிக் குழு (Social democratic group) என அழைக்கப்பட்டது. *1894* இல் லெனின் பீட்டர்ஸ்பர்க் வந்ததும், அக்குழு வலுப்பெற்றது. லெனினுடன் இணைந்து பணியாற்றிய குருப்ஸ்காயா அவருடைய நெருங்கிய தோழியானாள். இருவரும் கைது செய்யப்பட்டனர். சைபீரியாவுக்கு நாடுகடத்தும் முன்பு இருவரின் திருமணம் நடைபெற்றது. இருவரும் இணைந்து சமூக மாற்றத்திற்கான பணியில் முழுமையாக ஈடுபட்டனர்.

லெனின் விவசாயிகளின் கஷ்டங்களை நேரில் கண்டவர். லெனினின் தாயும் அடக்குமுறைக்கு எதிராக செயல்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. லெனின் இளைஞர்களுக்கு ஒரு முன்மாதிரியாகிவிட்டார். "ஒருவர் நல்ல தோழராக இருக்க வேண்டும் என்றால், அனைத்து விஷயங்களையும் கூர்மையாக கவனிக்க வேண்டும். மார்க்சியம் பற்றி படித்தால் மட்டும் போதாது. பூர்ஷ்வாக்களின் எழுத்துக்களையும் வாசிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக, மார்க்ஸ் மற்றும் மார்க்சியம் பற்றி அவர்கள் என்ன எழுதுகிறார்கள் என்பதை வாசிக்க வேண்டும்" என்று லெனின் கூறுவதை குறிப்பிடுகிறார்.

மார்க்சிய கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்லும் எளிமையான முறைகளை லெனின் கண்டுபிடித்தார். லெனின் அடிக்கடி சொல்லும் ஒரு கருத்தை குருப்ஸ்காயாவும் வலியுறுத்துகிறார். "ஒரு பொருளை உண்மையாக ஆராய வேண்டுமெனில், அதை பல கோணங்களிலிருந்து அணுக வேண்டும். அதை நாம் முற்றிலும் தீர்வு செய்ய முடியாது. ஆயினும் இவ்வாறு ஆழ்ந்து ஆராய்வதால் பெரும் தவறுகள் ஏற்படாமல் தவிர்க்க முடியும். உணர்ச்சியற்று செயல்படுவதை தடுத்துக் கொள்ளலாம்."

ஒரு சிறந்த மார்க்சியவாதியாக, கம்யூனிஸ்டாக குருப்ஸ்காயா எப்படி செயல்பட்டார்? கல்வி, சிறுவர்கள்/ இளைஞர்களை கம்யூனிசத்தின்பால் ஈர்க்க வைத்து, ஒருங்கிணைப்பது, பெண் விடுதலை, சர்வதேச மாதர் இயக்கம் ஆகிய மூன்று விஷயங்கள் மீது தனது முழு கவனத்தையும் செலுத்தினார். கல்விக்கு முன்னுரிமை அளித்தார். விவசாயிகள், தொழிலாளர்கள் என அனைவரும் கல்வி கற்க வேண்டும். புரட்சி திடீரென வெடிக்காது. மக்களை பயிற்றுவிக்க வேண்டும்.

லெனின் கூறியது போல, "புரட்சிகர சித்தாந்தம் இல்லாமல், புரட்சி இயக்கம் இருக்க முடியாது. சந்தர்ப்பவாதத்தின் நாகரீக உபதேசமும், நடைமுறை செயல்களை மிகவும் குறுகிய விதத்தில் செய்வதற்கான கவர்ச்சியும் ஒன்றையொன்று தழுவி நிற்கும் இந்நேரத்தில் இக்கருத்தை எந்த அளவுக்கு வற்புறுத்தினாலும் தகும்."

(1902 'என்ன செய்வது?' - லெனின்) நாம் தற்போது எதிர்கொள்ளும் பிரச்னைகளை புரிந்துகொள்ள இதை நாம் பொருத்திப் பார்க்க வேண்டும்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது என்ன, பொது மக்களை எப்படி அணுகுவது அவர்களிடம் கம்யூனிச கருத்துக்களை எப்படி கொண்டு செல்வது போன்றவற்றை லெனின் எவ்வாறு செயல்படுத்தினார், எப்படி மற்ற தோழர்களை செயல்பட வைத்தார் என்பதை அடிக்கடி தனது உரைகள் மற்றும் எழுத்துக்களில் குருப்ஸ்காயா தெளிவுபடுத்துகிறார்.

குருப்ஸ்காயா எழுதிய கட்டுரைகள் பலவும் தொகுப்பாக வெளியிடப்பட்டுள்ளது. அவற்றில், கல்விக்கு பிரதான முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. செயிண்ட் பீட்டர்ஸ்பர்கில் (Saint Petersburg) கல்வி துறை தலைவராக அவர் பணியாற்றி உள்ளார். வயோதிபர்களுக்கு கல்வி அவசியம் என்பதை உணர்ந்த அவர், அதற்கென பிரத்தியேகமான பாடதிட்டங்களை தயாரித்தார். விவசாயிகளை எப்படி பயிற்றுவிப்பது என்பது மிகப் பெரிய சவாலாகவே இருந்தது.

கல்வியின்மை பிற்போக்குதனத்திற்கு காரணம் என்பதை குருப்ஸ்காயா உறுதியாக நம்பினார். கற்றுக் கொள்பவர்கள் முழுமையான பங்கேற்பாளர்களாக இருக்க வேண்டும் என வலியுறுத்தினார். இதில் அவர் மற்ற பல தோழர்களின் கருத்துக்களில் இருந்து மாறுபட்டாலும், தனது கருத்தை ஆணித்தரமாக முன்வைத்தார். கல்விதான் மாற்றத்தை ஏற்படுத்தும். கேள்வி கேட்க துணிவைக் கொடுக்கும். "தோழர்களே பயப்படாதீர்கள். உங்கள் எதிர்காலத்தை, உங்கள் வாழ்க்கையை உங்கள் கையில் எடுத்துக் கொள்ள கல்வி அவசியம்" என திரும்பத் திரும்ப எடுத்துரைத்தார்.

வயது வந்தவருக்கு கல்வி அளிக்க தனித்திட்டம் உருவாக்கியது போலவே, இளைஞர்களுக்கு அரசியல் கல்வியின் முக்கியத்துவத்தை குருப்ஸ்காயா வலியுறுத்தியுள்ளார். எழுத்தறிவின்மையை ஒழிப்பது, அதிகார வர்க்க மனப்பான்மையை எதிர்த்து போராடுவது, நாட்டை எதிர் நோக்கியுள்ள பிரச்சனைகள் அனைத்திலும் அரசியல் கல்வி அளிக்கும் தோழர்கள் அக்கறை கொள்ளவேண்டும். தொழிலாளர்களும் கல்வி கற்பதில் ஆர்வம் காட்டவேண்டும். தொழில்நுட்ப அறிவை வளர்க்க வேண்டும்.

இதை பற்றி குருப்ஸ்காயா கூறுகையில், "அறிவியல் அகடமியின் ஒவ்வொரு அமர்வும் தொழிலாளர்களிடையே விளக்கும் வேலையை செய்ய வேண்டும். அகடமியின் கோஷம் 'விஞ்ஞானமும், அறிவும், தொழில்நுட்பமும் மக்களுக்காகவே' இது அகடமிக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு கல்வி நிலையமும், தொழில் கல்லூரியும், பல்கலைக்கழகமும் இதை பின்பற்ற வேண்டும்" என வலியுறுத்தினார்.

"இதை அறிவுஜீவிகள் மட்டும் பின்பற்றினால் போதாது. கம்யூனிச வாலிபர் சங்கம், தொழிற்சங்கம் ஆகியவை, ஜனரஞ்சகமான மொழியில் எப்படி பேசுவது, எழுதுவது, தனது அறிவை பிறருக்கு பகிர்ந்தளிப்பது என்பதை ஒவ்வொரு தொழில் கல்லூரியின், விவசாய கல்லூரியின், பல்கலைக்கழகத்தின் மாணவனும் அறிய வேண்டும். கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் இதுபற்றி கவனமாக இருக்க வேண்டும்" என குருப்ஸ்காயா சுட்டிக் காட்டியுள்ளார். அது மட்டுமல்ல. கம்யூனிச வாலிபர் சங்கம் தயாரிக்கும் கல்வி திட்டத்தில் இடம் பெற வேண்டிய விஷயங்களை பற்றியும் தெளிவுபடுத்தி உள்ளார்.

"பரந்த கலாச்சார நடவடிக்கை, கலாச்சார நடவடிக்கைகளை தொழில் நோக்கங்களுடன் இணைத்தல், தொழில் பற்றிய பிரச்சாரத்தை மக்களின் பல தொழில் நுட்ப கல்வி கண்ணோட்ட விஸ்தரிப்புடன் இணைத்தல், அரசியல் கல்வி நடைமுறை வேலைகளில் மார்க்சீய–லெனினிய கருத்துக்களை புகுத்துதல், ஆசிரியர்களிடையே வேலை செய்தல், சோவியத் நிபுணர்களை இவ்வேலைக்காக சேகரித்தல், கல்வி நிலையங்களை அரசியல் கல்வி வேலையின் மையங்களாக மாற்றுதல் ஆகியவை ஆழ்ந்த முக்கியத்துவம் வாய்ந்தவை" என குருப்ஸ்காயா வழிகாட்டியுள்ளார். அரசியல் கல்வி

தொடர்பாக அவர் கூறியுள்ள கருத்துக்கள் இன்றும் நமது கட்சி கல்வி பணிகளை செய்ய உதவும் என்பதில் ஐயமில்லை.

**குழந்தைகள் பற்றி குருப்ஸ்காயா**

“எனக்கென்று சொந்தமாக குழந்தைகள் இல்லை என்று நான் இப்பொழுது வருந்தவில்லை. ஏனென்றால் எனக்கு அநேக குழந்தைகள் உள்ளனர். கம்சோமோலியர்கள் (கம்யூனிஸ்ட் இளைஞர் சங்கத்தின் உறுப்பினர்கள்), இளம் பயனீர்கள், அவர்கள் அனைவரும் லெனினிஸ்டுகள். அவர்கள் வேண்டுகோளின் பெயரில்தான் நான் சுயசரிதை எழுதினேன். அவர்களுக்கு, எனது அருமை பிள்ளைகளுக்கு நான் இதை அர்ப்பணிக்கிறேன்” என தனது சுயசரிதையின் முடிவுரையில் குறிப்பட்டுள்ளார். *1923* இல் ‘பிராவ்தா’வில் அவர் எழுதிய கட்டுரையின் சில முக்கிய அம்சங்கள் இங்கே குறிப்பிடத்தக்கவை ஆகும்.

“குழந்தைகள் இயக்கத்திற்கும், குழந்தைகள் ஸ்தாபனத்திற்கும், என்ன அவசியம்? என தோழர்கள் கேட்கலாம். அவர்கள் வளரட்டும். மேலும் முதிர்ச்சி அடையட்டும். அவர்கள் பிறகு கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தில் சேர்வார்கள் என்று சொல்லலாம். இப்பொழுது என்ன புரியும்? அவர்கள் விளையாடட்டும். பள்ளிக்கு செல்லட்டும் என்று சொல்வார்கள்” என்று கூறிவிட்டு, குருப்ஸ்காயா தனது கருத்தை பதிவிடுகிறார்:

“10 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களையும், சிறுமிகளையும் உட்கொண்ட சிறுவர் கம்யூனிஸ்ட் இயக்கமே இளம் பயனீர் கழகமாகும். இக்கழகம் அதன் உறுப்பினார்களுக்கு கூட்டுணர்ச்சியை புகட்டுகிறது. இன்பத்தையும், துன்பத்தையும் கூட்டத்துடன் பகிர்ந்து கொள்ளப் பழக்குகின்றது. கூட்டத்தின் நலனே தங்களின் நலன் என போதிக்கின்றது. கூட்டாக வேலை செய்யும் திறமை, இயங்கும் திறமையை வளர்க்கின்றது. தாங்கள் மனிதகுலத்தின் மலர்ச்சிக்காக போராடும் தொழிலாளி வர்க்கத்தின் உறுப்பினர்கள், சர்வதேச பாட்டாளி வர்க்கம் என்ற மாபெரும் சேனையின் உறுப்பினர்கள் என்பதை அவர்களுக்கு உணர்த்தி, குழந்தைகளின் கம்யூனிஸ்ட் மனவுணர்வை வளர்க்கின்றது. விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டும். விளையாட்டு அவர்களின் நுண்ணறிவு, சமயோசித புத்தி, முன்முயற்சி ஆகியவற்றை



வளர்க்கின்றது.”

குழந்தைகளை பயிற்றுவிப்பது எவ்வளவு முக்கியம் என்பதை குருப்ஸ்காயா கீழ்க்கண்ட வரிகளில் சுட்டிக்காட்டுகிறார். “சோஷலிச கட்டுமானம் என்பது ஒரு புதிய பொருளாதார அடிப்படையை தோற்றுவிப்பது மட்டுமல்ல; சோவியத் ஆட்சியை அமைத்து, அதை நிலை நிறுத்துவது மட்டுமல்ல; கம்யூனிஸ்டுகளை போல, சோஷலிஸ்டுகளை போல ஒவ்வொரு பிரச்னையையும் ஒரு புதிய வழியில் தகர்க்கும் ஒரு புதிய தலைமுறையை வளர்க்க வேண்டும். இத்தலைமுறையின் பழக்கங்களும், பிற மக்களிடம் காட்டும் மனப்போக்கும் முதலாளித்துவ சமுதாயத்தில் இருந்தவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாய் இருக்க வேண்டும். தோழமை உணர்வை வளர்ப்பது, நிலையுறுத்துவது இளம் பயனீர்கள் கழகத்தின் முக்கிய பணிகளாகும். இக்குழந்தைகள் சமுதாய ஊழியர்களாக இருக்க வேண்டும்”

அமெரிக்கா சென்று ரஷியா திரும்பிய ஒரு ஆசிரியரிடம் குருப்ஸ்காயா பேசிய பொழுது “ரஷ்யாவில் நிகழ்ந்துள்ள மாறுதல்களில் எது சிறந்தது என கருதுகிறீர்கள்” என்று கேட்ட பொழுது, “மக்கள் இப்போது அடிக்கடி “நான்” என்று கூறாமல், “நாம்” என்று கூறுகிறார்கள்” என்றார் அந்த ஆசிரியர். இதனைச் சுட்டிக்காட்டி, இளம் பருவத்திலேயே, எந்த வேறுபாடுமின்றி வளர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி உள்ளார்.

சோஷலிச அமைப்பில் குழந்தை வளர்ப்புமுறையில் ஒவ்வொரு குழந்தையின் திறமை, செயல்வன்மை ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பதை குறிக்கோளாக கொள்ள வேண்டும் என்று தொடர்ந்து குருப்ஸ்காயா வலியுறுத்தினார். வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தி, கூட்டாக கற்கும் முறையை அமுல்படுத்த வேண்டும். அவசியமான சர்வதேசியவாத கருத்தை குழந்தைகளுக்கு ஊட்டக் கூடிய புத்தகங்களின் தேவை பற்றியும், இருந்த பாசிச சக்திகளை எதிர்த்து போராடுபவர்களை மதிக்க கற்று தரவேண்டும் என்றும் கூறும் அவர், “புத்தகங்கள் எந்த விதத்தில் இருக்க வேண்டும் என்பது முக்கியமல்ல. மாறாக, அவற்றின் உள்ளடக்கம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதே முக்கியம்” என்று கூறியுள்ளார்.

**இளைஞர்கள் பற்றி குருப்ஸ்காயா**

*1917* இல் ‘பிராவ்தா’வில் இளம் தொழிலாளர்களுக்கான போராட்டம் பற்றிய கட்டுரையில், வாலிபர்கள் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் எப்படி செயல்பட வேண்டும் என ஏராளமான கருத்துக்களை குருப்ஸ்காயா முன்வைத்துள்ளார். அவர் கூறுகிறார்:

“தோழர்களே, நீங்கள் இன்னும் முதிர்ச்சி அடையவில்லை, அரசியலில் ஈடுபடவும், ஏதோ ஒரு போக்கை சார்ந்து நிற்கவும் உங்களுக்கு வயது போதாது. நீங்கள் முதலில் படிக்க வேண்டும். அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் பூர்ஷவாக்கள் அடிக்கடி கூறுவார்கள். அதன் அர்த்தம் என்ன? என்னையும், எனது கட்சியையும் தவிர

எவரையும் உன்னிடம் செல்வாக்கு செலுத்த விடாதே என்பதாகும். ஒரு கம்யூனிஸ்ட் வாலிபர் எப்படி இருக்க வேண்டும்? கூர்மையான கம்யூனிஸ்ட் நோக்கு தேவை. அரசியல் கல்வியின் அடிபடையை கற்றுக் கொள்ளலாம். ஆனால், அநேக சமயங்களில், அரசியல் கல்வி என்பது ஒன்று. வாழ்க்கை என்பது வேறொன்று. சிறந்த கம்யூனிஸ்டுகளாக இருக்க வேண்டும் என விரும்பினாலும், வாழ்க்கையில் அரசியல் கல்வியை எப்படி பயன்படுத்துவது, இவை இரண்டும் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது என்பது தெரிவதில்லை''

இதனை விளக்க, ஆலை தொழிலாளி வாலிபரின் வாழ்க்கையை குருப்ஸ்காயா எடுத்துக்காட்டாக சுட்டிக்காட்டுகிறார். வேலையை கெடுக்கும் தாறுமாறான விமர்சனங்களை வாலிபர்கள் தவிர்க்க வேண்டும். தோழமையுடனும், ஒற்றுமையுடனும் வாலிபர் சங்கம் செயல்பட வேண்டும் என்றும், வாலிபர் சங்கத்தின் முக்கிய கடமைகளையும் வரிசைபடுத்துகிறார். (1935 'இளம் கம்யூனிஸ்ட் சஞ்சிகை' இதழ் 8).

**பெண்கள் மற்றும் மாதர் இயக்கம் பற்றி குருப்ஸ்காயா**

கம்யூனிச இயக்கத்தில் இணைந்தது முதல் பெண் விடுதலைக்காக அழுத்தமாக குரல் கொடுத்தவர் குருப்ஸ்காயா. தனது தாயின் செயல்பாடுகளை கவனித்த அவர், பெண்களின் ஆற்றலைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருந்தார். தான் பேசும் கூட்டங்களில் பெண் விடுதலை பற்றி நிறைய பேசினார். சோஷலிசம் மற்றும் பெண் விடுதலை பற்றி நிறைய எழுதினார். சோஷலிச சமுதாயம் அமைந்த உடனேயே, பெண் விடுதலை சாத்தியமாகி விடுவதில்லை என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்திருந்தார். வாலிபர் சங்கத்திற்கு முன் உள்ள கடமைகளில், பெண்கள் முழுமையாக விடுதலையுற வழி செய்ய வேண்டுமென்கிறார்.

"நமது சங்கத்தில் சுறுசுறுப்புடன் இயங்கும் சிறந்த பெண்கள் இருக்கிறார்கள். ஆனால், இளம் பெண்களை முழுமையாக நோக்கினால், அவர்கள் பழங்காலத்தின் மிச்ச மீதங்களின் ஆதிக்கத்தில் இருந்து வருவதை காணலாம். இதற்கு நாம் நன்கு விளக்கியும், ஒழுங்கமைத்தும் பெரும் அளவுக்கு பாடுபட வேண்டும். தினசரி பாடுபடவேண்டும். இதற்கு பொறுமையும், உறுதியும் தேவை. வாலிபர்கள் தினந்தோறும் இந்த வேலையை செய்ய வேண்டும். பெண்கள் கலாச்சாரத் துறையில் பின் தங்கியுள்ளனர். இது பெண்களின் சமூக பணிகளுக்கு தடையாக இருக்கிறது. பெண் கல்விக்கு முன்னுரிமை தரவேண்டும். பெண் குழந்தைகள் மட்டுமின்றி, மூத்த சகோதரிகளும் கல்வியின் முக்கியத்துவத்தை உணர வேண்டும். வெறும் எழுத்தறிவு போதாது. 'ஒவ்வொரு சமையல்காரியும் அரசாளும் திறமை பெற வேண்டும்' என்ற லெனினின் வாரத்தைகள் நமது பெண்களுக்கு தெரியும். ஆனால், அதை செய்ய ஏராளமாக படிக்க வேண்டும். ஏராளமாக தெரிந்து கொள்ள வேண்டும்'' என்கிறார் குருப்ஸ்காயா.

குடும்ப வளர்ப்பையும், சமூக வளர்ப்பையும் இணைத்தல் பற்றிய பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டும். சோவியத் யூனியனில், சோஷலிச அமைப்பை நிறுவிய உடனேயே பெண்கள் விடுதலை பெறவில்லை. அவர்களை வீட்டிற்கு வெளியே வர வைப்பதே மிகப் பெரிய சவாலாக இருந்தது. குருப்ஸ்காயாவின் பணி அளப்பரியது. சோவியத் யூனியனில் இருந்த மத்திய ஆசிய பகுதிகளில், பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வர தயங்கினார்கள். வீடு, வீடாக சென்று, அப்பெண்களிடம் தினமும், பேசி பேசி, பெண் விடுதலை பற்றிய கருத்துக்களை முன்வைத்தார்.

வீடுகளின் கதவை கூட சில பெண்கள் திறக்க மாட்டார்கள். ஜன்னல் அருகில் நின்று, குருப்ஸ்காயா அப்பெண்களிடம் பேசுவார். கல்வியின் முக்கியத்துவம், சமூக உற்பத்தியில் பெண்கள் பங்கு பற்றி அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் பேசுவார். பெண் விடுதலை அவ்வளவு சுலபமாக கிடைப்பதல்ல. சுய கல்வியின் தேவை பற்றி உணர்த்துவார். பழங்காலத்தில், பெண்கள் எப்படி அடிமைகளாக இருந்தனர் என்பதை பற்றி விளக்கி, பெண்கள் மீதான கொடுமைகளை பற்றி எடுத்துக் கூறி, சோவியத் யூனியனின் நிர்மாணத்தில் பெண்கள் எப்படி சிறப்பான பங்கை செலுத்த முடியும் என்று அசராமல் கூறுவார்.

வீட்டு வேலை செய்யும் பணிப் பெண்களுக்கு சங்கம் தேவை என்பதையும், அவர்களுக்கு கல்வி எவ்வளவு முக்கியம் என்பதையும் குருப்ஸ்காயா அழுத்தமாக விளக்கி உள்ளார். அது மட்டுமல்ல திருமணம், சுயநலம், கணவன் மனைவியிடையே நேர்மையற்ற போலி உறவுகள், கருச்சிதைவுகள், திருமண வாழ்வில் உள்ள குட்டி பூர்ஷுவா அணுகுமுறை எப்படி தொழிலாளர் குடும்பங்களில் கூட தொற்றிக் கொள்கிறது என்பது போன்ற குடும்பம் தொடர்பான விஷயங்களை பற்றி விளக்கமாக எழுதியுள்ளார். ஒரு கம்யூனிஸ்ட், பெண் விடுதலைக்கு செய்ய வேண்டியவை என்ன என்பதை பற்றி நிறைய எழுதியுள்ளார்.

ஒரு கம்யூனிஸ்டின் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி தனது கருத்துக்களை நன்கு பதிவு செய்துள்ளார். "கட்சியின் உறுப்பினராக இருக்க, கட்சி சீட்டை பெற்றிருப்பது, சோஷலிச பத்திரிகைக்கு சந்தா செலுத்துவது, கூட்டங்களுக்கு செல்வது ஆகியவை மட்டும் போதாது, சொந்த வாழ்வு சமூக வாழ்விலிருந்து வேறுபட்டு நிற்க முடியாது என்பதை தெளிவாக உணரும் சகாப்தத்தில் நாம் வாழ்கிறோம். போராட்டத்துடன், கம்யூனிச கட்டுமானத்துடன் நமது சொந்த வாழ்க்கையை இணைக்க முயல வேண்டும். நிச்சயமாக, இதனால் சொந்த வாழ்க்கையை ஒதுக்கிவிட வேண்டும் என்பதல்ல. கம்யூனிஸ்ட் கட்சி ஒரு சமயப் பிரிவல்ல. சந்தர்ப்பவாதிகள் லட்சியத்தை மறந்து, அடிப்படையானவற்றை விட்டுக்கொடுக்கிறார்கள். இதில்தான் சந்தர்ப்பவாதிகள் புரட்சியாளர்களிடமிருந்து வேறுபடுகின்றனர். சுயகல்வியை தொடர்வது மிக மிக அவசியம்.

கல்வி, குழந்தைகள், வாலிபர்கள், மாதர்கள் என மக்கள் அனைவரும், எந்த வேறுபாடுமின்றி, கம்யூனிச சித்தாந்த பிடிப்புடன் வாழ வேண்டும் என பேசியதுடன், எழுதியதுடன் மட்டும் குருப்ஸ்காயா நிற்கவில்லை. லெனின் என்ற மாபெரும் தலைவனின், தோழியாக, துணைவியாக, ஒரு மார்க்சிஸ்ட், கம்யூனிஸ்ட் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு எடுத்துக்கட்டாக விளங்கினார். ஆயிரக்கணக்கான நூலகங்களை நிறுவிய பெருமை அவரை சேரும். கிராமப்புறங்களில் படிக்கும் கிளப்களை, படிக்கும் அறைகளை உருவாக்கினார். இஸ்க்ரா பத்திரிக்கையின் செயலராக சிறப்பாக பணியாற்றியவர். பெண் தொழிலாளர்களுக்கென 'வுமன் வொர்க்கர்' (Women Worker) என்ற பத்திரிகை நடத்தினார். அவர் பெப்ரவரி 27, 1939இல் மறைந்ததும் வெளிவந்த செய்தியில், 'ஓர் அசாதாரண பெண்மணி மறைந்தார்' என குறிப்பிடப்பட்டது.

குத்தும் ஊசிகளின் மீது இப்போது இருப்பதைப் போல, உலகம் ஒருபோதும் இவ்வளவு ஆபத்தான நிலையில் இருந்ததில்லை. ஐரோப்பா அணு ஆயுத போர் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ள நிலையில், மேற்கு ஆசிய பிராந்தியம் இனப்படுகொலையை முகங்கொடுத்து வருகின்ற நிலையில், மற்றும் உலகின் எஞ்சிய பகுதிகள் நிச்சயமற்று இருக்கையில், தார்மீக வங்குரோத்து நிலையின் விளிம்பில் ஊசலாடிக் கொண்டிருக்கும் ஒரு நாடு (இலங்கை) – அமெரிக்காவின் தலைமைத்துவ மாற்றத்தில் இருந்து எதிர்பார்ப்பதற்கு என்ன உள்ளது.

எந்தவொரு அளவுகோலின்படி மதிப்பிடப்பட்டாலும், ஜோ பைடன் நிர்வாகம் (இரண்டாம்) உலகப் போருக்குப் பிந்தைய ஒழுங்கில் மிகவும் மனிதவிரோத அமெரிக்க ஆட்சிமுறையைக் கொண்டுள்ளது. பொறுப்பற்ற இஸ்ரேலிய தாக்குதல்கள், பட்டினி மற்றும் உயிருக்கு ஆபத்தான காயங்களுக்கு சிகிச்சையளிக்க மருந்து இல்லாமல் இறக்கும் ஆயிரக்கணக்கான (பலஸ்தீனிய, லெபனான்) குழந்தைகள் குறித்து அது (பைடன் ஆட்சி) எந்த இரக்கத்தையும் காட்டவில்லை.


பிரான்ஸ் போன்ற அமெரிக்க நட்பு நாடுகள் கூட காத்திரமானது என்று பாராட்டிய காஸா போர்நிறுத்த தீர்மானமொன்றினை நான்காவது தடவையாக கொல்வதற்கு, 20.11.2024 அன்று, பைடன் நிர்வாகம், இரக்கமின்றி, வெட்கமின்றி, மீண்டுமொருமுறை, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அதன் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தியது. உலகெங்கும் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்ட அதே நாளில் ஒரு தீர்மானத்தைக் கொல்வதென்பது, போரில் குழந்தைகளைக் காப்பாற்றுவதை விட, இஸ்ரேலின் தற்பாதுகாப்பு உரிமையை அமெரிக்கா முக்கியமானதாகக் கருதுகிறது என்பதற்கு மேலும் ஒரு சான்றாகும்.

பைடன் நிர்வாகம் சித்தாந்த ரீதியாக சியோனிச தன்மை கொண்டது. இஸ்ரேலின் போர்க்குற்றங்களுக்கு எதிராக உறுதியாக செயல்படத் தவறியது, அப்பாவிகளைக் கொல்வதில் அறம் இருப்பதாக அது நம்புகின்றது என்பதையே சுட்டிக் காட்டுகின்றது. பைடன் நிர்வாகத்தின் செயல் அல்லது செயலற்ற தன்மை, பலஸ்தீனிய நிலங்களில் இருந்து பலஸ்தீனியர்களை இனச்சுத்திகரிப்பு செய்வது, இனப்படுகொலை செய்வது மற்றும் இஸ்ரேலின் சட்டவிரோத குடியேற்றங்களை விரிவுபடுத்துவது என்று பொருள் கொண்டாலும், இஸ்ரேலின்

# பைடனின் விளைவு: காஸா இனப்படுகொலையும் ஐரோப்பாவில் அணு ஆயுதப் போருக்கான சாத்தியங்களும்

இருப்பை உறுதி செய்யும் சியோனிச சித்தாந்தத்திற்கு அது ஒப்புதலளித்துள்ளது என்பதையே குறிக்கின்றது.

சில நேரங்களில், காஸாவில் மோசமடைந்து வரும் மனிதாபிமான நெருக்கடி குறித்து கவலை கொண்டிருப்பதாக தன்னை காட்டிக்கொள்ளும் வகையில் பைடன் நிர்வாகம் இஸ்ரேலிற்கு எச்சரிக்கை விடுக்கும். ஆனால் இஸ்ரேல் இந்த எச்சரிக்கைகளை கண்டுகொள்ளாமல், அமெரிக்காவின் முகத்தில் கரியைப்பூசி விட்டு அகன்று விடுகின்றது.




மனிதாபிமான நெருக்கடி ஒரு மோசமான பேரழிவாக மாறக்கூடும் என்பதால், இந்த ஆண்டின் தொடக்கத்தில், ஒரு மில்லியனுக்கும் அதிகமான பலஸ்தீனியர்கள் தஞ்சம் புகுந்துள்ள காஸாவின் ரஃபா (Rafah) பிராந்தியத்திற்கு துருப்புக்களை அனுப்ப வேண்டாம் என்று அமெரிக்கா இஸ்ரேலை எச்சரித்தது. இஸ்ரேல் அந்த எச்சரிக்கையை புறந்தள்ளிவிட்டு தான் விரும்பியதைச் செய்தது. பின்னர் ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில், காஸாவிற்குள் மேலும் மனிதாபிமான உதவிகளை அனுமதிக்காவிட்டால் இஸ்ரேல் ஆயுதத் தடையை எதிர்கொள்ளும் அபாயம் உள்ளது என்று அமெரிக்கா எச்சரித்தது. அந்த எச்சரிக்கையுடன் கூடிய 30 நாள் காலக்கெடு கடந்துவிட்டது. ஆனால் இஸ்ரேலின் இணக்கமின்மைக்கு பைடன் நிர்வாகத்திடமிருந்து எந்த தண்டனை நடவடிக்கையும் இல்லை.

மாறாக, காஸாவில் இஸ்ரேலின் மிருகத்தனமான குற்றங்களை நியாயப்படுத்த அமெரிக்கா தொடர்ந்து சாக்குப்போக்குகளைக் கண்டுபிடித்து இஸ்ரேலுக்கு அமெரிக்க வீட்டோ அதிகாரத்தை பரிசாக வழங்கி வருகின்றது. ஐக்கிய நாட்டு பாதுகாப்புச் சபையில் முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள அமெரிக்கா, ஏன் அது ஒரு புறம்போக்காளராக இருக்கிறது மற்றும் ஏன் அது ஒரு உலகளாவிய சமாதானக் கொலைகாரனாகவும், காஸா இனப்படுகொலைக்கு ஓர் உடந்தையாளராகவும் கூட மாறியுள்ளது போன்றன குறித்து சுயபரிசோதனை செய்யத் தவறிவிட்டது.

பைடன் நிர்வாகம், அதன் நான்காண்டு பதவிக் காலத்தில், ஒக்ரோபர் 7, 2023 அன்று ஹமாஸ் தாக்குதலுக்கு பதிலளிக்கும் விதமாக, இஸ்ரேல் சரிசமமான இராணுவ பதில் தாக்குலுக்கு அப்பால் செல்வதைத் தடுப்பதற்கும், காஸாவில் மொத்த இனப்படுகொலையைத் தொடங்குவதற்கும், தனது அதிகாரங்களைப் பயன்படுத்தாது குற்றம் புரிந்துள்ளது. இது மட்டுமல்லாமல், பைடன் நிர்வாகம் ரஷ்யாவின் மேற்கு எல்லைகளுக்கு நேட்டோவின் விரிவாக்கம் குறித்த ரஷ்யாவின் பாதுகாப்புக் கவலைகளை நிவர்த்தி செய்வதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும் புறக்கணித்தது.

***அமீன் இஸாதீன்*** **(Ameen Izzadeen)**

உக்ரைன் யுத்தம் தவிர்க்கப்பட்டிருக்கக் கூடியது. ஆனால் அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும், அவர்களது இராணுவ–தொழில்துறை நிறுவனங்களுடன் சேர்ந்து, அவர்களின் சமீபத்திய ஆயுதங்களை பரிசோதிக்கவும், ரஷ்யாவின் இராணுவம் மற்றும் பொருளாதார வளங்கள் இரத்தம் சிந்தவும், யுத்தம் நடக்க வேண்டும் என்று விரும்பின. உக்ரேனிய மக்கள் அனுபவிக்கும் துன்பங்களைக் காட்டிலும், அமெரிக்காவிற்கும் அதன் சில நேட்டோ நட்பு நாடுகளுக்கும் புவிசார் அரசியல் நோக்கங்கள் மிக முக்கியமானவை ஆகும். பெப்ரவரி 2022 இல் ரஷ்யா திடீரென போரைத் தொடங்கவில்லை. உக்ரைனின் மேற்கத்திய சார்பு ஜனாதிபதி வொலோடிமிர் ஷெலென்ஸ்கி நேட்டோவில் சேர்வதற்கு பொறுமையிழந்து காணப்பட்டதால், நெருக்கடியைத் தீர்க்க உக்ரைனுக்கு முன்மொழிவுகள் ஒன்றன் பின் ஒன்றாக அனுப்பப்பட்டன.

இந்த (நேட்டோவில் சேரும்) நகர்வு, அமெரிக்க–ரஷ்ய உறவுகளில் மிகவும் சிக்கலான பிரச்சினைகளில் ஒன்றான

ரஷ்யாவின் எல்லைகளுக்கு அருகாக, அமெரிக்காவும் அதன் நேட்டோ கூட்டாளிகளும் ஏவுகணைத் தளங்களை நிறுவ அனுமதிக்கும். ஆனால் ஷெலென்ஸ்கி, அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிற நட்பு நாடுகளின் ஆலோசனைகளின் பேரில், ரஷ்ய சமாதான முன்மொழிவுகளை நிராகரித்து, ரஷ்ய படையெடுப்பைத் துரிதப்படுத்தினார். இது இறுதியில், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஐரோப்பாவில் மிகப்பெரியதும் கொடியதுமான மோதலுக்கு வழிவகுத்தது. ரஷ்யா விரும்பியதெல்லாம், உக்ரைன் நடுநிலை நாடாக இருக்க வேண்டும் என்பதுதான். இந்த வாரம், அமெரிக்கா வழங்கிய ATACMS (Army Tactical Missile System - இராணுவ தந்திரோபாய ஏவுகணை அமைப்பு) ஏவகணைகளை பயன்படுத்த உக்ரைனுக்கு அமெரிக்கா அனுமதி அளித்தது. இந்த ஏவுகணைகள் நீண்ட தூரம் (300 கிலோ மீற்றர்) செல்லும் வகையில், துல்லியமான தாக்குதல்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், Multiple Launch Rocket System (MLRS) மற்றும் High Mobility Artillery Rocket System (HIMARS) போன்ற தளங்களிலிருந்தும் ஏவப்படலாம்.

இவற்றில் ஆறு (ATACMS) ஏவுகணைகளை ரஷ்யாவிற்குள் உள்ள இலக்குகள் மீது தாக்குவதற்கு உக்ரைன் பயன்படுத்தியது. அவற்றில் 5 ஏவுகணைகளை சுட்டு வீழ்த்தப்பட்டதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. ஓர் ஏவுகணை ரஷ்யாவின் பிரையன்ஸ்க் (Bryansk) பிராந்தியத்தில் உள்ள இராணுவ தளத்தை தாக்கியது. ATACMS ஏவுகணைகளை பயன்படுத்தியமையானது ரஷ்யா விதித்த சிவப்புக் கோட்டை மீறியுள்ளது.

இந்த ஏவுகணைத் தாக்குதல் ரஷ்யாவை அதன் அணுசக்தி கோட்பாட்டை புதுப்பிக்கத் தூண்டியுள்ளது. 20.11.2024 அன்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் இந்த புதுப்பித்தலுக்கு அனுமதி அளித்தார், இது ரஷ்யா அதன் எதிரிகளுக்கு எதிராக அணுவாயுத தாக்குதலைத் தொடங்குவதற்கான இடைவெளியைக் குறைக்கின்றது. அணுவாயுதத்தைக் கொண்டிராத சக்தியால் ரஷ்ய மண்ணின் மீதான தாக்குதலொன்றுக்கு, அணு ஆயுத நாடொன்றால் எதிரிக்கு ஆதரவளிக்கப்பட்டால், அது அணு ஆயுத பதிலடிக்கான அடித்தளமாக இருக்கும் என்று அந்த (புதுப்பிக்கப்பட்ட) கோட்பாடு கோடிட்டுக் காட்டுகிறது.

இதற்கிடையில், ரஷ்ய (ரஷ்யா – உக்ரைன் எல்லையிலுள்ள) நிலப்பரப்பான குர்ஸ்க் (Kursk) பிராந்தியத்தில் ஒப்ரோபர் மாத நடுப்பகுதியில் 400 வீரர்களை ரஷ்யா கொன்றுள்ளது. 2025, ஜனவரி 20 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் டிரம்ப் பதவியேற்ற பின்னர் நடக்கக்கூடிய அமைதிப் பேச்சுவார்த்தைகளில் பேரம் பேசும் துருப்புச் சீட்டாக இந்த பிராந்தியம் பயன்படுத்தப்படலாம் என்ற நம்பிக்கையில், இதனை (கடந்த ஒகஸ்ட் 20ந் திகதியிலிருந்து) உக்ரைன் பிடித்து வைத்துள்ளது. (இதுவரையில் அரைவாசிப் பகுதியை ரஷ்யா விடுவித்துள்ளது)

எனினும் இந்த இடைப்பட்ட காலத்தில், வெளியேறும் பைடன் நிர்வாகம் போரை ஆபத்தான அணுசக்தி மட்டங்களுக்கு எடுத்துச் செல்ல எத்தணிக்கின்றது. உக்ரைனிடம் அணு ஆயுதங்கள் இல்லை. ஆனால் அது அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய மூன்று அணு ஆயுத சக்திகளினால் ஆதரிக்கப்படுகின்றது. ATACMS ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்துவதை அங்கீகரித்த அமெரிக்கர்கள், நிட்சயமாக அணுவாயுத தாக்குதல் உட்பட கடுமையான ரஷ்ய பதிலடியை கணித்திருப்பார்கள். அப்படியானால், அமெரிக்கா ரஷ்யாவை அணு ஆயுதப் போருக்குத் தூண்டவில்லையா?

ரஷ்ய இலக்குகளுக்கு எதிராக உக்ரைன் தந்திரோபாய ஏவுகணைகளைப் பயன்படுத்துவது இது முதல் தடவையல்ல. செப்டம்பர் 22, 2023 அன்று, கிரிமியாவின் (Crimea) செவஸ்ரோபோலில் (Sevastopol) உள்ள ரஷ்யாவின் கருங்கடல் கடற்படை தலைமையகத்தைத் தாக்க பிரித்தானியா வழங்கிய Storm Shadow ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தியது. இந்த (நவம்பர்) மாத நடுப்பகுதியில் குர்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள ரஷ்ய இலக்குகள் மீதும் இத்தகைய ஏவுகணைகள் ஏவப்பட்டன.

ரஷ்யா தன்னை இறுக்கமானதொரு இராணுவ நிலையில் கட்டமைத்துள்ளபோது, இந்த ஏவுகணை தாக்குதல்கள் நடந்துள்ளன. வட கொரிய துருப்புகளை ரஷ்யா இணைத்திருப்பதானது, இராணுவ பலவீனத்தின் சாத்தியத்தை அல்லது என்ன விலை கொடுத்தாவது போரை முற்கூட்டியே முடிக்க வேண்டும் என்ற உறுதியைக் குறிக்கின்றது. ஜெலன்ஸ்கி ஒரு வெற்றித் திட்டம் பற்றி செருக்குடன் பேசுகிறார். ஆனால் புட்டின் ஒரு வெற்றியாளராக அன்றி போரை நிறுத்த வாய்ப்பில்லை. ரஷ்யாவின் கொல்லைப்புறத்தில் ஒவ்வொரு நாடும் அமெரிக்கா மற்றும் நேட்டோவை பற்றிக் கொண்டிருக்கும் நிலையில், ஒரு தோல்வி என்பது ரஷ்யாவிற்கு பாதுகாப்பு பேரழிவொன்றினை ஏற்படுத்தும்,

ரஷ்யா உளறவில்லை. நெருக்கடி வரும்போது, அணு ஆயுதங்களைப் பயன்படுத்த ரஷ்யா தயங்காது. இருப்பினும், உக்ரைனுக்கான இராணுவ உதவிகளை நிறுத்துவதாகவும், போரை முடிவுக்குக் கொண்டுவருவதாகவும் (புதிதாகப் பதவியேற்கப்போகும் ஜனாதிபதி) டரம்ப் அளித்த வாக்குறுதியின் மீதும் அது நம்பிக்கை கொண்டுள்ளது. ஆயினும்கூட, இடைக்காலத்தில், போரை ரஷ்யாவின் இதயப்பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கான பைடன் நிர்வாகத்தின் நகர்வுகளுக்கு பதிலளிக்க தயாராக இருக்க வேண்டும் என்று ரஷ்யா உணர்கின்றது.

ட்ரம்ப்பில், ரஷ்யா தனது நிபந்தனைகளின்படி போரை முடிவுக்குக் கொண்டுவரும் நம்பிக்கையைக் காணலாம். ஆனால் காஸாவில் இறந்து கொண்டிருக்கும் பலஸ்தீனியர்கள் ட்ரம்பின் தலைமைத்துவம் குறித்து அவ்வளவு நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. ட்ரம்பின் தலைமைத்துவம், சியோனிச வெறியர்களுக்காக இஸ்லாமின் மூன்றாவது புனித மசூதியின் இடிபாடுகளின் மீது மூன்றாவது (யூதக்) கோயிலைக் கட்டுவதற்காக ஜெருசலேமின் அல் அக்ஸா மசூதியை அழிப்பது மற்றும் மேற்குக் கரையை இணைத்துக் கொள்ளுதல், காஸாவை இனச் சுத்திகரிப்பு செய்தல் ஆகியவற்றிற்கு பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ள கடும்போக்கு சியோனிஸ்டுகளால் நிரம்பி வழிகின்றது.

*(இக்கட்டுரை 22.11.2024 இல் Dailymirror பத்திரிகையில் வெளியானது)*

**தமிழில்: வானவில்**

# புதிய அரசாங்கம் ஓர் இடதுசாரி அரசாங்கமா?




இலங்கையில் சமீபத்தில் நடந்து முடிந்துள்ள ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் மூலம் தேசிய மக்கள் சக்தி தலைமையிலான புதிய அரசாங்கம் ஒன்று பதவிக்கு வந்துள்ளது. இந்த அரசாங்கத்தை சர்வதேச ஊடகங்கள் எனக் குறிப்பிடப்படும் முதலாளித்துவ ஊடகங்கள் "இடதுசாரி அரசாங்கம்" எனக் குறிப்பிட்டு வருகின்றன.

அவை மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி போன்ற கட்சிகளும் புதிய அரசாங்கத்தை இடதுசாரி அரசாங்கம் எனக் குறிப்பிட்டு வாழ்த்துத் தெரிவித்துள்ளன. (ஆனால் இலங்கையிலுள்ள பெரும்பாலான ஊடகங்கள் புதிய அரசாங்கத்தின் தன்மையை சரியாக புரிந்து கொண்டதாலோ என்னவோ, அதை இடதுசாரி அரசாங்கம் என அழைப்பதைத் தவிர்த்துள்ளன)

தேசிய மக்கள் சக்தியின் பிரதான தலைமைக் கட்சி ஜே.வி.பி. கட்சியாகும். இந்தக் கட்சி ஆரம்பம் முதல் தன்னை ஒரு இடதுசாரி கட்சி என்று சொல்லிக்கொண்டாலும், இடதுசாரிகளுக்கு உரிய சித்தாந்த – அரசியல் பண்பாடுகளில் ஒன்றான இனங்களின் சமத்துவத்தையும், சுய நிர்ணய உரிமையையும் ஏற்று மதிக்கும் கொள்கை ஜே.வி.பியிடம் ஒருபோதும் இருந்ததில்லை.

இலங்கையில் சிங்கள – தமிழ் முரண்பாட்டை பிரித்தானிய ஏகாதிபத்தியம் திட்டமிட்டு ஏற்படுத்திவிட்டுச் சென்றது என்பதையும், அதை பின்னர் ஆட்சிக்கு வந்த சிங்கள முதலாளித்துவ வர்க்கம் தனது ஆட்சியதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும், பலப்படுத்துவதற்காகவும் சிங்கள பேரினவாதத்தை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி வந்துள்ளது என்பதையும், அதற்கு எதிர்வினையாக தமிழ் முதலாளித்துவ வர்க்கம் தனது அரசியல் இருப்புக்காகவும் ஆதிக்கத்துக்காகவும் தமிழ் குறுந்தேசிய இனவாதத்தை இன்னொரு ஆயுதமாகப் பயன்படுத்தி வந்துள்ளது என்பதையும், இலங்கையின் உண்மையான இடதுசாரி சக்திகள் ஏற்று வந்துள்ளனர்.

அந்த இரு வகையான முதலாளித்துவ இனவாத தேசியவாதங்களின் முரண்பாட்டு வளர்ச்சிதான், இலங்கையில் ஒரு இனவாத உள்நாட்டு யுத்தத்தைத் தோற்றுவித்தது என்பதும் அநேகமான மார்க்சியர்களின் கருத்தாகும். எனவேதான், தேசிய ஒடுக்குமுறைக்குள்ளான தமிழ் தேசிய இனங்களின் மீதான சகலவிதமான ஒடுக்குமுறைகளும் நீக்கப்பட்டு, அவர்களுக்கு ஐக்கியப்பட்ட நாட்டுக்குள் சுய நிர்ணய அடிப்படையில் அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் எனவும், இடதுசாரி சக்திகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளன.

அருமைநாயகம்

ஆனால், ஜே.வி.பி. இந்த இடதுசாரி பாரம்பரியத்தில் இருந்து ஆரம்பம் முதல் விலகியே செயல்பட்டு வந்துள்ளது. அது இலங்கையர்கள் எல்லோரும் சமம் என்று சொல்லிக் கொண்டாலும், இலங்கையில் சிறுபான்மை இனங்கள் ஒடுக்குமுறைக்கு உள்பட்டுள்ளன என்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால்தான் ஜே.வி.பி. இலங்கையில் சிறுபான்மை இனங்களுக்கு, குறிப்பாக தமிழர்களுக்கு, குறைந்தபட்ச அதிகார பகிர்வு வழங்குவதற்குத் தன்னும் முன்னைய அரசுகளால் மேற்கொண்ட அத்தனை முயற்சிகளையும் மூர்க்கத்தனமாக எதிர்த்து வந்துள்ளது.

இடதுசாரிகளின் அடிப்படையான கொள்கைகளில் ஒன்று சர்வதேசியத்துவமாகும். அப்படியிருக்கையில், சிங்கள பேரினவாதத்தைத் தனது அடிப்படைக் கொள்கையாக வைத்திருக்கும் ஜே.வி.பி. கட்சியினால் தலைமை தாங்கப்படும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எவ்வாறு 'இடதுசாரி அரசாங்கம்' என அழைக்க முடியும்?

இந்தப் பிரச்சினையை, அதாவது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஓர் இடதுசாரி அரசாங்கம் அல்ல என்ற பிரச்சினையை, இன்னொரு கோணத்தில் இருந்தும் விளக்க முடியும்.

தேசிய மக்கள் சக்தி தான் ஆட்சிக்கு வந்தால் அரசின் தன்மையில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என்று கூறி வந்தது. தன்மை மாற்றம் என்றால் அரசின் தன்மையை அடிப்படையில் மாற்றியமைப்பது என்பதாகும்.

முதலாவதாக, தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததே தற்பொழுது இலங்கையில் உள்ள முதலாளித்துவ அமைப்பு முறையிலான தேர்தலின் மூலமே என்பதை மனம் கொள்ள

**தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க…**